MAR.'50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

கண்ணன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1950
MADRAS

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 3

தபால் பெட்டி : 604
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
மன்னனின் பரிசு - சி. பாலசுப்பிரமணியன் 4
நான் வாத்தியாரானால் - படங்கள் 9
சிரித்த பூக்கள் - ஈ. ஸ்ரீ. நரசிம்மன் .. 13
ஜக்கு - கீழே இறங்குகிறான் - 'ஆர்வி' .. 17
நீங்களே செய்யலாம் - படங்கள் 24
வேலி தாண்டாத ஆடு - 'சோமசன்மா' .. 25
பாலை நிலச் சிறுவர் - ச. கு. கணபதி ஐயர் 30
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 35
பாழடைந்த பங்களா - 'வாண்டு மாமா' .. 37
அணில் - தி. ஜ. ர. 42
பவழவல்லி - கி. ரா. 47
ராஜேன் பாபு - கி. வா. ஜகந்நாதன் .. 51
சென்னையைச் சுற்றியுள்ள ஊர்கள் .. 56
ஜடாமுனிக் கோட்டை - வேங்கடேசன் .. 57
கண்ணன் தபால் 64

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

என்ன சொல்கிறது போங்கள், எனக்கு உண்டான சந்தோஷத்தை! ரெயில் பரிசுக்காக நூற்றுக்கணக்கான கதைகள் வந்தன. ஒவ்வொன்றாக நிதானமாகப் படித்தேன். அவ்வளவையும் படிக்க அலுத்துப்... - அலுத்துப்போனேன் என்று சொல்ல வருவதாக எண்ணிவிடாதீர்கள். அலுத்துப் போகவே இல்லை. படிக்கப் படிக்க அதிகச் சந்தோஷந்தான் உண்டாயிற்று. எத்தனை ராஜா ராணிகள்! எத்தனை மந்திரவாதிகள்! எத்தனை திருடர்கள், ராட்சசர்கள்! குதிரையும், பல்லக்கும் கதைகளில் வந்தன. படத்தில் காட்டிய மனிதனையும் பெண்ணையும் கல்யாணம் பண்ணிவைப்பதில் எல்லோரும் ஒருமனசோடு இருந்தார்கள். எல்லாக் குழந்தைகளும் தங்கள் திறமையைக் காட்டியிருந்தார்கள்.

யாருக்குப் பரிசு கொடுப்பது? சிறிது சங்கடமான விஷயந்தான். என்னுடைய சிநேகிதர்களிடமும் கலந்து ஆலோசித்தேன். பரிசுக் கதையைக் கடைசியில் தேர்ந்தெடுத்து விட்டேன். தொண்டைமான் நல்லூர் சிரஞ்சீவி சி. பாலசுப்பிரமணியன் இந்த ரெயிலைக் கொண்டு போகப் போகிறான். அவனுடைய அதிருஷ்டத்தைப் பாராட்டுகிறேன். அவனைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவலாக இருக்கிறது. உங்களுக்குந்தான் இருக்கும்! அவன் படத்தைக் கேட்டிருக்கிறேன். அடுத்த இதழில் வெளியிடப் போகிறேன்.

உங்களுக்குக் கதை எழுதுவதில் இத்தனை உற்சாகம் இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை. இந்த உற்சாகத்தை வீண் அடிக்கக் கூடாது. ஆகையால் மறுபடியும் கதை எழுதச் சொல்லிப் பரிசு தருவதாக எண்ணியிருக்கிறேன். இந்தத் தடவை பேனாப் பரிசு தரப்போகிறேன். இதைப்பற்றி மற்றொரு பக்கத்தில் விவரம் இருக்கிறது.

இந்த இதழில் சில குழந்தைகள் எழுதிய கடிதங்கள் வந்திருக்கின்றன. எல்லோரும் கடிதம் எழுதலாம். ரஸமான விஷயமாக எழுதுங்கள். சப்பென்று கடிதமே எழுத வேண்டாம். ஸ்டாம்புச் செலவு லாபமாகும்.

கண்ணன் கழகம் வளர்ந்து வருகிறது. இன்னும் யார் யார் கூபனை அனுப்பவில்லையோ, உடனே அனுப்பிவிடுங்கள்.

—ஆசிரியர்

தீராத விளையாட்டுப் பிள்ளை

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்;
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்.

—பாரதியார்

பரிசு பெற்ற கதை

மன்னனின் பரிசு

சி. பாலசுப்பிரமணியன்

(கண்ணன் கழகம், B. 12)

ஜயசந்திரன் இடையில் வாளுடன் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து கடைசியில் மகேந்திரபுரியை அடைந்தான். அங்கே ஒரு வீதியில், "டண், டணுர்! டண் டணுர்!" என்ற முரசொலி கேட்டது. அதைத் தொடர்ந்து, "மகாராஜாவின் மகள் மனோரமா காணமற் போய்விட்டாள். அவளை யார் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குப் பல பரிசுகள் வழங்கப்படும்!" என்ற குரல் கேட்டது.

இதைக் கேட்ட ஜயசந்திரனுக்கு, 'நாம் ஏன் ராஜகுமாரியைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடாது?' என்ற யோசனை உதித்தது. அவனுக்குப் பறவைகளின் பாஷை தெரியும். அதைக் கொண்டு ஏதாவது சாதிக்கலாம் என்று நினைத்து, அரச சபைக்குச் சென்றான். "நீ யார்? நீ வந்த காரியம் யாது?" என்று கேட்டார் அரசர்.

"என் பெயர் ஜயசந்திரன். ஊர் வீணுபுரி. எனக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லை. என் இடையில் இருக்கும் வாள் தான் என்னுடைய ஒரே சொத்து. காணமற்போன உம்முடைய மகளைத் தேடி அழைத்து வருகிறேன்" என்றான் ஜயசந்திரன்.

"என் மகள் காணமற் போய்ப் பல நாட்கள் ஆகிவிட்டன. எண்ணற்ற பேர்கள் அவளைத் தேட முன் வந்து, எங்கெங்கோ போய் அலைந்தார்கள். ஒருவராவது திரும்பவில்லை!" என்றார் அரசர்.

"மன்னரே, நான் ஒரு காரியத்தில் இறங்கினல், அதில் ஜயமடையாமல் வீடு திரும்புவதில்லை. எனக்கு விடையளியுங்கள்!"

"ஜயசந்திரா, உன்னைப் பார்க்கிறபோதே எனக்கு உன் மேல் விருப்பம் உண்டாகிறது. நீ சொல்கிறதைப் பார்த்தால் வெற்றியுடன் திரும்பி வருவாய் போல்தான் தோன்றுகிறது."

"அரசரே, சந்தேகம் வேண்டாம். திரும்பி வந்தால், உங்கள் மகளுடன் திரும்பி வருவேன். இல்லாவிட்டால், உங்கள் முகத்திலேயே விழிக்க மாட்டேன்! இது உறுதி! போய்வருகிறேன்."

அரசர் ஜயசந்திரனைக் குதிரை லாயத்திற்கு அழைத்துச் சென்று ஒரு குதிரையைக் காட்டினார். அவன் அந்தக் குதிரைமேல் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

குதிரை வெகு வேகமாகச் சென்றது. காடு, மலை, வனம் எல்லாவற்றையும் கடந்து வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. பிறகு ஓர் இடத்தில் கொஞ்சம் மெதுவாகப் போக ஆரம்பித்தது. பாவம்! அதுவும் ஓர் உயிருள்ள ஜீவன்தானே?

ஜயசந்திரனுக்கும் களைப்பாக இருந்தது. ஆகையால் குதிரையை ஒரு மரநிழலில் கட்டிவிட்டு, தானும் அந்த மரத்தடியில் படுத்தான். அவன் விழித்தெழுந்தபொழுது கதிரவன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். இயற்கைக் காட்சிகளை ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த இயற்கைக் காட்சி



யிலே மனத்தைப் பறி கொடுத்து உட்கார்ந்திருந்த ஜயசந்திரன் பறவைகள் கூவுவதைக் கேட்டு மரத்தை அண்ணுந்து பார்த்தான். ஒரு கிளையில் இரண்டு புருக் கள் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தன. அவனுக்குத் தான் அந்தப் பாஷை தெரி யுமே; என்ன பேசுகின்றன என்று கவனித்தான்.

"கீழே இருக்கிருனே ஓர் இளைஞன், அவன் இங்கே இருப்பதே தவறு!" என்றது ஆண் புரு.

"ஏன்?" என்று கேட்டது பெண் புரு.

ஆண் புரு: இங்கிருந்து வடக்கே வெகு தூரத்துக்கு அப்பால் ஒரு மாளிகை இருக்கி றது. அதில் ஒரு மந்திரவாதி இருக்கிருன். அந்த மந்திரவாதி கண்ணில் பட்டால் இவனுக்கு அபாயம் உண்டாகும்.

பெண் புரு: அந்த மந்திர வாதி அவ்வளவு பொல் லாதவனு?

ஆ. பு: ஆம்! அவன் மாளி கையில் ஈ காக்கைகூடப் புக முடியாது. ஆனுல் நான் நுழைந்துவிடுவேன்.

பே. பு: நீ மட்டும் எப்படிப் புகுந்துவிடுவாய்?

ஆ. பு: அது ஒரு பெரிய ரகசியம். அதை யாரிடமும் சொல்ல மாட்டேன்.

பே. பு: அடா! ரொம்பவும் ஜம்பம் அடித்துக்கொள் ளாதே! அந்த ரகசியத்தை என்னிடம் சொல்ல மாட் டாயா?

ஆ. பு: சரி; யாரிடமும் சொல்லாதே. இங்கிருந்து வடக்கே மந்திரவாதியின் மாளிகைக்குப் போகும் வழி யில் ஒரு பிரம்மாண்டமான மரம் இருக்கிறது. அதில் சில காய்கள் பச்சை நிற மாகவும், சில காய்கள் சிவப்பு நிறமாகவும் இருக்கும். பச்சை நிறக் காயை உடைத்தால் விபூதிபோல் ஒரு வித மாவு இருக்கும். அந்த மாவை வயிற் றில் தேய்த்துக் கொண்டால், யார் கண்ணிலேயும் படாமல் மாயமாய் இருக்கலாம். அப் படியே அந்த மந்திரவாதியின் மாளிகையில் நுழைந்துவிட லாம். இன்னெரு விஷயம்: சிவப்புக் காயை உடைத்தால், அதிலும் ஒருவித மாவு இருக் கும்! அதை வயிற்றில் தேய்த் துக் கொண்டால் பழைய நிலையை அடைந்துவிடலாம். அந்த மந்திரவாதியிடம் ஒரு மந்திரக்கோல் இருக்கிறது. அது இல்லாவிட்டால், அவ னுல் ஒன்றும் செய்ய இயலாது.

இந்தப் புருக்களின் சம்பாஷ ணையைக் கேட்ட ஜயசந்திரன், 'ஒருவேளை அந்த மந்திர வாதியிடந்தான் அந்த ராஜ குமாரி சிக்கி இருப்பாளோ?' என்று எண்ணினுன். அங்கே போய்ப் பார்ப்பதென்று தீர்மானித்தான். குதிரையின் மேல் ஏறி வடக்குத் திசையை நோக்கிப் புறப்பட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் புரு சொன்ன மரத்தை அடைந்தான். சில சிவப்புக் காய்களையும் பச்சைக் காய்களையும் பறித்துக் கொண்டு மறுபடியும் குதிரையை ஓட்டினான். தூரத்தில் ஒரு மாளிகை தெரிந்தது.

குதிரை, மாளிகையை நெருங்கியதும் ஜயசந்திரன் அதை ஒரு மறைவான இடத்தில் கட்டினான்; பத்திரமாக வைத்திருந்த பச்சைக் காயை உடைத்தான்; அதிலிருந்த மாவை வயிற்றில் தேய்த்துக்கொண்டு மாளிகைக்குள் நுழைந்தான். ஓர் அறைக்கு அருகில் சென்ற போது, 'கொர் கொர்' என்ற குறட்டையின் சப்தம் கேட்டது. மெள்ள எட்டிப் பார்த்தான்.

நரைத்த தாடியுடன் அந்த மந்திரவாதி தூங்கிக்கொண்டிருந்தான். அவன் படுத்திருந்த கட்டிலை நெருங்கினான் ஜயசந்திரன். மந்திரவாதியின் முதுகுக்கு அடியில் ஒரு வெள்ளிப் பிரம்பு இருப்பதைக் கண்டு, அவன் முதுகைத் திருகிக் கிள்ளினான். உடனே மந்திரவாதி விழித்தெழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். மந்திரவாதியின் கண்ணுக்கு ஜயசந்திரன் பக்கத்தில் நிற்பது தெரியவில்லை. அவன்தான் மாயமாய் இருக்கிறானே.

சட்டென்று கட்டிலில் கிடந்த மந்திரக் கோலை எடுத்துக் கொண்டான், ஜயசந்திரன். மந்திரவாதியோ மறுபடியும் கட்டிலில் படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

ஜயசந்திரன் அறையை விட்டு வெளியேறினான். சிவப்புக் காயை உடைத்து அதிலுள்ள மாவை வயிற்றில் தேய்த்துக்கொண்டான். இனி மேல் அவன் ஏன் மறைவாக இருக்க வேண்டும்? அவனிடந்தான் மந்திரக்கோல் இருக்கிறதே!

இந்தச் சமயம் எங்கிருந்தோ ஒரு கிளி பறந்து வந்து அவன் இடது கையில் உட்கார்ந்து, 'கீச்...கீச்' என்று

கத்தியது. ஜயசந்திரன் அதை விளையாட்டாக மந்திரக் கோலி ஞல் தட்டினன். என்ன ஆச்சரியம்! அந்தக் கிளி அழகிய ராஜகுமாரியாக மாறியது. ஜயசந்திரன் பிரமித்தான்.

இதற்குள் கிளி கத்திய சத்தம் கேட்டுவிழித்துக்கொண்ட மந்திரவாதி அவர்கள் முன் வந்து நின்ருன். "ஹஹ்...ஹஹ் ...ஹா! டேய்! என்னை யாரென்று நினைத்துக்கொண்டாய்? உன்னை என்ன செய்கிறேன்பார்!" என்று உறுமினன்.

ஜயசந்திரனுக்குப் பக்கத்திலே நின்றிருந்த ராஜகுமாரி, அவனிடமிருந்த மந்திரக் கோலைப் பிடுங்கிக்கொண்டு, "நீ ஒரு பல்லக்காக மாறவேண்டும்!" என்று மந்திரவாதியைப் பார்த்துச் சொன்ஞள். மறு கணம் மந்திரவாதி ஒரு பல்லக்காக மாறினன். மந்திரக் கோலை ஜயசந்திரனிடம் கொடுத்து விட்டு, "நீங்கள் செய்த உபகாரத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவள்" என்ருள் ராஜகுமாரி.

ஜயசந்திரன், "எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே!" என்று சொல்லி, திடீரென்று ஏதோ நினைத்தவனய், "நீ மகேந்திரபுரி மன்னன் மகள் மனேரமாதானே?" என்று கேட்டான்.

"ஆம்! நான் தூங்கிக் கொண்டிருந்தபோது, என்னை இந்த மந்திரவாதி ஒரு கிளியாக மாற்றி இங்கே கொண்டு வந்துவிட்டான். ஆமாம்; நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

"நான் உன்னைத் தேடிக் கொண்டுதான் இங்கே வந்தேன். நல்ல வேளையாக உன்னைக் கண்டுபிடித்துவிட்டேன். வா போகலாம்" என்ருன்.

"இந்தப் பல்லக்கில் ஏறிக் கொண்டு போவோம்" என்ருள் ராஜகுமாரி.

இருவரும் பல்லக்கில் ஏறிக் கொண்டனர். மந்திரக் கோலின் உதவியால் பல்லக்கை ஆகாசத்தில் பறக்கவிட்டனர். சில விநாடிகளில் மகேந்திரபுரி மன்னனின் முன்வந்து நின்றது பல்லக்கு. மனேரமாவையும் ஜயசந்திரனையும் பார்த்த மன்னர் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப்போனர். மனேரமா ஓடிச் சென்று, "அப்பா!" என்று அவரைக் கட்டிக்கொண்டாள்.

ஜயசந்திரன் மந்திரக் கோலி ஞல் பல்லக்கைத் தட்டினன். பல்லக்கு மாயமாய் மறைந்தது. இதைப் பார்த்த மன்னர் திகைத்து, "இதெல்லாம் என்ன?" என்று கேட்டார்.

ஜயசந்திரனும் ராஜகுமாரியும் முழு விவரத்தையும் கூறினர்கள். அதைக் கேட்ட மன்னர் ஜயசந்திரனிடம், "நான் உனக்குக் கொடுக்கப் போகும் பரிசு என்ன தெரியுமா? என் மகள் மனேரமாவும், இந்த ராஜ்யமுந்தான்!" என்ருர், ஆனந்த மிகுதியால்.

இருவரும் புன்முறுவல் பூத்தனர்!

நான் வாத்தியாரானால்

'நீங்கள் வாத்தியாரானால் என்ன செய்வீர்கள்? அதை எழுதுங்கள்'' என்பது எங்கள் கேள்வி. இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியதை அப்படியே பிரசுரித்திருக்கிறோம்.

ஏ. வி. தயானந்தன், வயது 11.

நான் வாத்தியய் இருந்தல் எல்லெருக்கும் பாடம் செல்வி தருவேன் எல்லேருக்கு நல்ல குணங்கள் நல்ல ஒழுக்கங்கள் நல்ல நல்ல கதைகள் எல்லாம் செல்வி கொடுப்பேன் கூடவும் விளையாட்டுக்கள் செல்வி தருவேன் எல்லாருக்கும் வேலை செய்ய கற்று கொடுப்போன். சில பேருக்கு கார்கள் ஓட்டவும், விமானம் ஓட்டவும், ரயில் வண்டி ஓட்டவும், டிராம் வண்டி ஓட்டவும் கற்று கொடுப்பேன் சினிமா படங்கள் காட்டுவேன் தோட்டம் போட செல்வி கொடுப்பேன் எல்லேருக்கு பாட்டுக்களும் மோர்சிங் வசிக்க கற்றுகொடுப்போன் வெளியில் அழைத்து செல்லுவேன் இத்துடன் என்னுடைய அன்பார்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். விசுவநாதன், வயது 11.

நான் வாத்யாருக இறுன்தால் நான் பைய்யன்களை நான் அடிக்க மாட்டேன். தெரியாவிட்டால் நன்ருக சொல்லிக் கொடுப்பேன். நான் பைய்யன்களை வைத்துக் கொண்டு காலையில் பிறேயர் நடத்துவேன். நான் பைய்யன்களை மேகஸேனில் கதை எழுதச் செல்வேன். அவர்களுக்கு நான் வீட்டு வேலை கொடுப்பேன். பிறகு நன்ருக சொல்லிக் கொடுத்து விட்டு கால் பரிகைஷ வைப்பேன். பரிஷை முடின்தவுடன் விடு முறை பதினைந்து விடு நாள் முறை கொடுப்பேன். விடு முறை ஆன பின்பு இன்னும் கொஞ்சம் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு பிறகு அறை பரிஷ்ஷை வைப்போன். பிறகு எல்லா புஸ்தகத்தையும் சொல்கலிக் கொடுப்பேன். முற்றியது.

ஜி. ஆர். ஸ்ரீநிவாசன், வயது 9.

எஸ். லக்ஷ்மீபதி, வயது 11.

நான் வாத்தியாயர் ஆனால் நான் கணக்கு வாத்தியார் ஆகுவேன். யாராவது பேசினா அவர்களை கூப்பிட் நல்ல வார்தைகளில் பேசினால் தப்பு என்று சொல்லி அனுப்பித்து விடுவேன். யாராவது வகுப்பில் சிவிங்கம் முதலிய வற்றை சாப்பிட்டால் துப்பிவிட்டு வரச்சொல்வேன். வகுப்பில் குனிந்தால் நேரக உட்காரச் சொல்வேன். எப்பொழுதும் வாத்தியாயர்கள் பிள்ளைகளை அடித்து பயமுறுத்தக் கூடாது. பயமுறுத்தினால் இன்னும் அதிகமாக பன்ன ஆரம்பிக்கும். நான் வகுப்பி தாங்கு சேஷ்டை ஆரம்பித்த நள்ள வார்தைகள் சொல்லி வழிக் வரச்சொல்லுவேன்

நான் வாத்தியாரானால் பிள்ளைகளுக்கு மூளையில் ஏறுகிற முட்டும் திட்டாமல் சொல்லிக் குடுப்பேன் பிறகு படிப்பு மாத்திரமல்ல படிப்புக்குத் தகுந்த புத்தியும் அடக்கமும் ஒழுங்கும் ஒரு வரிடாமப்படி பேசவேண்டுமோ என்றுச் சொல்லிக் குடுப்பேன். பிறகு பேரியோர்களைத் திட்டக் கூடாது அவர்கள்ச் சொற்படி நடக்கவேண்டும் உபாத்தியாயற் சொற்படி நடக்க வேண்டும் பிறகு யேதாவது கணக்கோ அல்லது தமிழோ இந்தியோ இதைப்போல வீட்டில் செய்துகொண்டு வந்துக் காமிக்கவேண்டும் என்றால் அதைக் கட்டாயம் கொண்டு வந்துக் காமிக்க வேண்டும் ஏனென்றால் உபாத்தியாயர்ச் சொற்ப்படி நடந்துதான் ஆக வேண்டும் என்றெல்லாம் நான் சொல்லிக்குடுப்பேன்.

வி. கோபாலகிருஷ்ணன், வயது 9.

பி. கௌதமன், வயது 10.

நான் வாத்தியாரானால் பிள்ளைகளை ஒழுங்குடனும் ஊக்கத்துடனும் இருக் வைத்து அவர்களுக்குப் பலவிதமான பாடங்களைக் கற்றுக் கொடுப்பேன். பலவித விளையாட்டுக்களையும் கற்றுக்கொடுப்பேன். பிள்ளைகள் கூச்சல் போட்டுக்கொண்டும் குதித்துக்கொண்டு மிருந்தால் எனக்குப் பிடிக்காது. பிள்ளைகளில் மக்கா யிருப்பவர்களைத் திடீர் திடீரென்று கேள்விகள் பல கேட்பேன். அவர்களை அயல் நாட்டுக்கெல்லாம் அழைத்துச் சென்று முக்கியமான காட்சிகளைப்பற்றியெல்லாம் விளக்கிக் கூறுவேன். சரியான வேளையில் அவர்கள் வகுப்புக்கு வராவிட்டால் வெளியே நிறுத்தி வைப்பேன். படிக்காவிட்டால் அவர்களைக் கண்டிப்பேன். அவர்களுக்கு ஒழுங்கு முறைகளைப் போதிப்பேன். இப்படியே அவர்களை ஒழுங்காக நடத்துவேன்.

நான் உபாத்தியாராக ஆனால் முதலில் எல்லோரும் குளித்து நல்ல வெள்ளை உடைகள் உடுத்துக்கொண்டு இருக்கிறார்களா என்று பார்ப்பேன். அப்படி இல்லையென்றால், பள்ளிக்கூடத்திலிருந்து சோப் கொடுத்து நன்றாக குளிக்க வைப்பேன். யாராவது நேரங்கழித்து வந்துவிட்டால் அவர்களை தலைமை ஆசிரியரிடம் போய் உத்திரவு கேட்டுக்கொண்டு வா என்று அனுப்புவேன். ஆனால், நான் அவர்களை திரும்பி வீட்டுக்கு அனுப்பமாட்டேன். அவர்களுக்கு சந்தோஷமாகவே பாடங்களைக் கற்றுக் கொடுப்பேன். யாராவது கெட்ட நடைக்கையாய் நடந்தால் அவர்களை நல்லதனத்தில் சொல்லி கெட்டவனை நல்லவனாக மாற்றி விடுவேன். பள்ளிக்கூடம் முடிந்ததும் கத்த வைக்க மட்டேன். வந்தனம்!

ஜி. சந்திரா, வயது 9.

இந்திரா ஸ்ரீநிவாசன், வயது 10.

நான் வாத்தியாரானால் எல்லா பசங்களுக்கும் நன்றாக பாடம் கற்றுக் கொடுப்பேன். அந்தப் பசங்களுக்கு பாடம் கற்றுக் கொடுப்பதனால் எனக்கு சந்தோஷம். நான் அவர்களை அடிக்காமல் பாடம் கற்றுக் கொடுப்பேன். அந்தப் பள்ளிக்கூடத்தி எல்லா பசங்களுக்கும் சொல்லி கொடுத்து விட்டு, இன்னொரு பள்ளிக்கூடத்திற்கு போய் ஒரு ஆர்ட் வாத்தியாராக இருப்பேன். எந்தெந்த பசங்கள் என்னிடம் வந்து பொம்மை போட்டு தரச்சொல்கிறார்களோ அவர்களுக்கு நான் அழகான பொம்மைப் போட்டுத் தருவேன். பிறகு நான் இன்னொரு பள்ளிக்கூடத்திற்கு போய்க் கணக்கு வாத்தயாராக போவேன். அந்தப் பசங்களுக்கும் நன்றாக பாடம் கற்று கொடுப்பேன். அவர்கள் நன்றாக படிக்கும் வறையில் நான் சரியாகக் கற்றுக் கொடுப்பேன்.

நான் உபாத்யாயினியாக இருந்தால் எல்லாப் மாணவ மாணவிகளை என்னுடைய சொந்த தங்கை தம்பியைப்போல் பாவித்து அன்புடன் நடத்துவேன். எல்லோருக்கும் நன்றாக பாடம் கற்பிப்பேன். ஒருவரையும் துன்புறுத்தமாட்டேன். என்னுடைய சொந்த தங்கை தம்பியைப்போல் பாவித்து நடத்தும் மாணவ மாணவிகள் என்பால் மிகவும் அன்புடன் நடத்தும்படி நடந்துக்கொள்வேன். நான் வேலை பார்க்கும் பள்ளிக்கூடத்தில் என்னை பிடிக்காதவர்கள் ஒருவரும் இல்லாதபடி நடந்துக் கொள்வேன். எனக்கு நல்ல பேர் நான் வேலை பார்த்த பள்ளிக் கூடத்திற்கும் நல்ல பேர்வாங்கி கொடுப்பேன். இதற்கு மேல் என்ன செய்வேன் என்பது நான் உபாத்யாயினியாக ஆனபின்பு தான் தெரியும். ஆகையால் நான் இத்துடன் என் சிற்றுரையை நிருத்திக்கொள்கிறேன்.

★ சிரித்த பூக்கள் ★

ஈ. ஸ்ரீ. நரசிம்மன்

சண்பகபுரத்து அரசனுக்குப் பிரதிபா என்ற பெண் இருந்தாள். நல்ல அழகி. நன்றாய்ப் படிக்கவும் பாடவும் கற்றுக்கொண்டாள். எல்லா வித்தைகளிலும் தேர்ச்சி பெற்று, செல்வமாக வளர்ந்தாள்.

அவளுடைய அத்தை அடுத்த தேசத்து ராணி; அரசன் புருஷோத்தமனின் பட்டமகிஷி. அவர்களுக்குப் பத்மபவன் என்று ஒரே பிள்ளை. புத்தியிலும் வித்தையிலும் அவன் சிறந்து விளங்கினான்.

ஒவ்வொரு வருஷமும் சில நாள் பிரதிபா அத்தை வீட்டுக்குச் செல்வாள். அப்பொழுது பத்மபவனும் பிரதிபாவும் இணைபிரியாமல் விளையாடுவார்கள்; கதை பேசுவார்கள். சில சமயம் விடுகதைகளைச் சொல்லி விடைகளைக் கண்டுபிடிப்பார்கள். அவள், "மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது" என்பாள். அவன், "எலுமிச்சம்பழம்" என்று பதில் சொல்வான். அவன், "கறுப்புத் திருடன் கண்ணைக் காட்டுகிறான்" என்பான். அவள் "நாவற்பழம்" என்று சொல்லி விடுவாள். இப்படியே வேடிக்கையும் விளையாட்டுமாய்ச் சில நாட்களைக் கழிப்பாள். பிறகு அவனைப் பிரிய மனமில்லாமலே சண்பகபுரம் சென்றுவிடுவாள். இப்படியிருக்கும்போது பிரதிபாவின் தந்தைக்கும் அரசன் புருஷோத்தமனுக்கும் ஏதோ மனஸ்தாபம் நேரிட்டது. ஒருவர் தேசத்துக்கு ஒருவர் போவதில்லை.

பத்மபவனுக்கு வயது இருபத்துமூன்று ஆயிற்று. நாலைந்து வருஷங்களாக அவனும் பிரதிபாவும் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியவில்லை. புருஷோத்தமன் தன் மகனைக் காசிக்கு ராஜப்பிரதிநிதியாக அனுப்பிவிட்டான்.

சண்பகபுரத்து முதல் மந்திரி இதைக் கண்டான். அவன் பலே கைகாரன். எப்படியாவது இந்தச் சமயத்தில் அரசகுமாரியைத் தன் மைந்தனுக்குக் கல்யாணம் முடித்துவிட நினைத்தான். அரசனிடம் சென்று தன் புத்திரனின் வீரதீர பராக்கிரமங்களைச் சொல்லிப் புகழ்ந்தான். அரசன் தன் சகோதரியையும் அவள் புருஷனையும் வெறுத்தான். மேலும் மந்திரியின் பேச்சைக் கேட்பதைத் தவிர அரசனுக்கு வேறு வழி

யில்லாமல் இருந்தது. மந்திரியின் பிள்ளைக்குத் தன் குமாரியைக் கொடுக்க அவன் இணங்கினான்.

பிரதிபாவுக்கு இது தெரிந்தது. அரசனே அவள் அத்தையிடம் கோபமாக இருக்கிறான். பத்மபவனை மணக்க என்ன செய்வது என்று யோசித்தாள். அரசன் அவளிடம் வந்து, "கண்ணே பிரதிபா, நம் மந்திரி குமாரன் அதிமேதாவி. சமயோசிதமாய்ப் பேசவும் பதில் சொல்லவும் தெரிந்தவன். அழகாகவும் இருக்கிறான்" என்றான்.

"அப்பா, தங்கள் இஷ்டப்படி மந்திரி குமாரனை மணந்து கொள்ளத் தடையில்லை. ஆனால் நம் உறவினர் அவ்வளவு பேரும் நம்மைப் பழிப்பார்கள். ராஜகுமாரர்கள் பலர் இருக்கும்போது மந்திரி குமாரனுக்குப் பெண்ணைக் கொடுத்தான் என்று உங்களை ஏசுவார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் நான் ஓர் ஏற்பாடு சொல்லட்டுமா?" என்றாள்.

"என்ன ஏற்பாடு? சொல்லேன்" என்றான் அரசன்.

"எனக்கு ஒரு சுயம்வரம் நடத்துங்கள். அதற்கு எல்லா ராஜகுமாரர்களும் வருவார்கள். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதன் விடையோ ஒருவருக்குமே தெரியாது. மந்திரி குமாரன் தான் பெரிய கெட்டிக்காரன் என்கிறீர்களே! அவன் நிச்சயம் பதில் சொல்லிவிடுவான். அப்பொழுது அவனை மணந்து கொண்டால் யார் என்ன சொல்ல முடியும்?" என்றாள்.

அரசன் சம்மதித்தான்.

சுயம்வர மண்டபத்தில் பல ராஜகுமாரர்கள் பல தேசங்களிலிருந்து வந்திருந்தார்கள். மந்திரி குமாரனும் அங்கே இருந்தான். பிரதிபா அலங்கரித்துக் கொண்டு ஓய்யாரமாக, சுயம்வர மண்டபத்துக்கு வந்தாள். அவள் கண்கள் ஜாடையாக யாரையோ எதிர்பார்த்தன. பிறகு ராஜகுமாரர்களைப் பார்த்து, "என் கேள்விக்கு யார் விடையளிக்கிறார்களோ அவருக்கு நான் மாலையிட வேண்டும் என்பது அரசருடைய கட்டளை. கேள்வி இதுதான்: பிரம்மா பல பூக்களை உண்டாக்கினார். ஒவ்வொரு பூவாக அழகு பார்த்து, அவர் ஆனந்தம் அடைந்தார். அப்போது மூன்று பூக்கள் அவரைப் பார்த்துச் சிரித்தன. அவருக்குக் கோபம் வந்தது. நீ என்னைக் கண்டு சிரிப்பதால், எப்போதும் உள்ளே மறைந்தே இருப்பாய்" என்று ஒரு பூவைச் சபித்தார். 'நீ நெருப்பிலே பூப்பாய்' என்று இரண்டாவது பூவைப் பார்த்துச் சொன்னார். மூன்றுவது, பூ, தன்னையும் அவர் நெருப்பில் போட்டு விடுவாரோ என்று பயந்தது. அது உடனே இந்த உலகத்தை விட்டு மறைந்தது. இந்த மூன்று பூக்களின் பெயரைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியைக் கேட்டு எல்லா அரசகுமாரர்களும் விழித்தார்கள். பதில் தெரியவில்லை. மந்திரிகுமாரனும் அவள் எதிர்பார்த்தபடியே ஆந்தைபோல் விழித்தான். ஒருவன் மட்டும் கம்பீரமாக எழுந்து நின்று, "என்னால் சொல்ல முடியும்" என்றான். பிரதிபாவின் கண்கள் ஆனந்தத்தினால் மலர்ந்தன. அவள் அவனை ஆவலோடு பார்த்தாள்.

"முதல் பூ வாழைப்பூ. அதை எப்போதும் பட்டை

மூடியிருக்கும். இரண்டாம் பூ மத்தாப்பூ. அது நெருப்பில் தான் பூக்கும். மூன்றும் பூ அத்திப்பூ; அதுதான் இந்த உலகத்திலேயே இல்லையே" என்றான் அந்த ராஜகுமாரன்.

எல்லாரும் ஆச்சரியத்தோடு அவனை உற்றுப் பார்த்தார்கள். அரசன், "பத்மபவனு! நீ எப்படியப்பா இங்கே வந்தாய்?" என்றான்.

"பிரதிபாவின் கேள்வி என்னை இங்கே அழைத்தது" என்றான் பத்மபவன்.

பிரதிபா மகிழ்ச்சி தாங்காமல், பத்மபவனுடைய கழுத்தில் மாலையைப் போட்டாள். பிறகு அவனைப் பார்த்து, "இந்தக் கேள்விக்கு விடை சொல்லாமல் முன்பு ஒரு சமயம் என்னை ஏமாற்றினீர்களே; ஞாபகம் இருக்கிறதா? இப்பொழுது எனக்கு இதனால் இரண்டு லாபம். ஒன்று நீங்கள் கிடைத்தீர்கள். இரண்டாவது இந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்தது" என்றாள் சிரித்துக் கொண்டே. அவள் சிரிப்பு, பூக்கள் சிரிப்பதுபோலவே இருந்தது.



56-ஆம் பக்கத்திலுள்ள ஊர்களின் பெயர்

1. திருவல்லிக்கேணி; 2. அம்பட்டன் வாராவதி;
3. வேப்பேரி; 4. பெரியமேடு; 5. பிரம்பூர்;
6. அடையாறு; 7. சேத்பட்டு; 8. கிண்டி;
9. ஆயிரம் விளக்கு.

அட்டைப் படம்

அலையில் எறிந்த பந்து.

ஜக்கு

'ஆர்வி'

கீழே இறங்குகிறன்...

ஜக்குவுக்கு இதற்குள் ஊரிலிருந்து பல கடிதங்கள் வந்துவிட்டன. மணி, சீதாராமன், சுப்புணி எல்லாரும் எழுதியிருந்தார்கள். அம்புலு கூடக் குண்டு குண்டாக ஒரு கார்டு எழுதியிருந்தாள். "ஜக்கு! உன் போட்டோவைப் பேப்பர்லே பார்த்தேன். மாமி காட்டிஞ. ரொம்ப ஜோராய் இருந்தது. நீ வர போது எனக்கு ஒரு கண்ணை மூடித் திறக்கும் செலுலாயிடு பொம்மை வாங்கிண்டு வா. எங்க அப்பா கிட்டே பணம் வாங்கிக் கொடுத்துடறேன்" என்று எழுதியிருந்தாள்.

ஜக்குவுக்கு ரொம்பப் பெருமையாய் இருந்தது. கப்பலில் நின்றபடி ஒரு பையனுடைய போட்டோ எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தால் யாருக்குத்தான் பெருமையாய் இருக்காது? எவ்வளவு ஊர்களில் எவ்வளவு பேர் பார்க்கிருர்கள்!

ஜக்குவுக்கு இரண்டு நாளாய் ஓய்ச்சல் ஒழிவு இல்லை. நந்துவின் வீட்டு மாடிக்கும் அவன் வீட்டு மாடிக்கும் ஒரு நூல் டெலிபோன் கட்டிஞர்கள். நூறு நூறு கஜத்துக்கு இரண்டு நூல் கண்டுகள், நாலு அட்டைக் குழாய்கள் இவை தாம் செலவு. நூல் ஒன்றிலும் நடுவில் உராயாமல் அட்டைக் குழாய் மூடியில் ஓட்டை போட்டு வந்து சேரும்படி செய்தார்கள். இவன் வீட்டு மாடி அறையையும் நந்துவின் வீட்டு மாடி அறையையும் மறுநாளே இரண்டு நூல் தந்திக் கம்பிகள் இணைத்தன.

அது மணி அடிக்காது. ஜக்கு, "அடேய், மேலே போய்க் காதை வைத்துக் கொள்ளடா!" என்று சொல்லிவிட்டு வருவான். அவன் போனதும், "ஹலோ" என்று கூப்பிடுவான். சற்று நேரத்தில் டெலிபோனில் ஒருவன் பேசுவது மற்றவனுக்குக் கேட்கும்.

பேச விஷயமே முதலில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

"அடே நந்து, சாப்பிட்டு விட்டாயா?"

"சாப்பிட்டுவிட்டேன். நீ?"

"நானும் சாப்பிட்டாச்சு."

"பேசறது நன்னுய்க் கேக்கறதா?" என்ருன் நந்து.

"ஓ! உனக்கு?" என்று கேட்டான் ஜக்கு.

"எனக்குந்தான்."

"அடே நந்து, எனக்குக் கப்பல் காப்டனாகப் போகணும்னு ஆசையாய் இருக்கடா?"

"எனக்குந்தாண்டா."

"அன்னிக்கு லைட் ஹவுஸ், கோட்டை எல்லாத்தையும் பார்த்துட்டு வந்தோமே, நாம்ப பெரிய எஞ்சினீயராகப் போனா எவ்வளவு ஜோராய் இருக்கும்! அப்படிப் போகணும் போலே இல்லே?"

"ஆமாண்டா."

பெரிய கிரிக்கட் சாம்பியனாகி டெஸ்ட் மாட்ச் எல்லாம் விளையாடி எல்லாரும் புகழும்படி ஆகப்போறேன்!"

"நானுந்தாண்டா. எனக்கும் அதாண்டா ஆசையாய் இருக்கு. ஆனா அந்த 'உல்ப்' இருக்கான் பாரு, அவன் சும்மா என்னைக் கேலி பண்ணிண்டே இருக்காண்டா! நீ அவனை எப்படியாவது ஒரு நாளைக்கு நன்னா மட்டந்தட்டி அழவைக்கணும்டா!"

"உம் - பார்க்கலாம்!" என்றான் ஜக்கு.

"எல்லாம் சரிதாண்டா ஜக்கு, நீ உங்க ஊரிலே போய்ப் படிக்கிறதைவிட இங்கேயே என் பள்ளிக்கூடத்துலே சேர்ந்து விடேன்" என்றான்.

ஜக்குவுக்கும் ஆசையாய்த்தான் இருந்தது. ஆனால் அவனுடைய அப்பா விட மாட்டாரே. அப்படியே விட்டாலும் இன்னொரு கஷ்டம் ஒன்று இருக்கிறதே. யாரோ தினம் ஒரு தடவை அவனை டெலிபோனில் கூப்பிட்டு, "எங்கே போனே? என் போனே?" என்றெல்லாம் மிரட்டிக் கொண்டே இருக்கிறார்களே! அதை நினைத்ததும் ஜக்குவுக்குப் பயமாய் இருந்தது. நந்துவிடம் இதை ஒரு நாள் அவன் சொல்லிவிட்டான். அதன் பிறகு அவன் மனத்துக்கு ஆறுதலாய் இருந்தது.

"அடே, இப்படி மிரட்டுவது யாராய் இருக்கும்?" என்று கேட்டான் நந்து.

"தெரியலியேடா" என்றான் ஜக்கு. யார் என்று அவனால் ஊகித்துப் பார்க்கவே முடியவில்லை.

நந்து அநுதாபப்பட்டான். படிப்பில் ஜக்கு எப்படியோ நந்துவுக்குத் தெரியாது. ஆனால் அவன் எல்லாவற்றிலும் கெட்டிக்காரன் என்று நந்து எண்ணினான். ரொம்பத் தைரியசாலி என்பதையும் கண்டான். அவனோடு சிநேகமாய் இருப்பதே ஒரு பெரிய தெம்பாய் இருந்தது. ஜக்குவை இப்படி யாரோ ஒருவன் ஒன்றிலும் புத்தியை ஓடவிடாமல் அடிக்கடி 'காபரா' பண்ணிக் கொண்டிருக்கிறானே. இதுதான் நந்துவுக்கு வருத்தம். ஜக்குவைச் சதா விட்டுப் பிரியாமல் இருப்பதைப் பார்த்த நந்துவின் சிற்றப்பா நந்து கீழே வந்ததும், "யாருடா அந்தப் பையன்? அவனை இங்கே கூட்டிக் கொண்டு வாடா; பார்ப்போம்" என்றார்.

நந்து ஓடிப்போய் ஜக்குவை அழைத்து வந்து அவர் முன் நிறுத்தினான். அவர், "உன் பேர் என்னடா, பையா?" என்று கேட்டார்.

ஜக்கு பட்டென்று, "ஜகந் நாத்" என்முன்.

"எந்தக் கிளாஸ் படிக் கிறே?"

"செகண்ட் பாரம் போகப் போறேன்."

"உங்க தஞ்சாவூரிலே இருக் கிற பழைய அரண்மனையை யெல்லாம் பாத்திருக்கயா?"

"ஓ!"

"அங்கே சுரங்க வழி ஒண்ணு இருக்கே!"

"ஓ! அதுக்குள்ளேயும் போயிருக்கேன்!"

"உங்க ஊரிலே என்னமோ விசேஷமானது என்பார் களே!"

"பெரிய கோயில்!"

"எஸ்! டக், டக் கென்று பதில் சொல்கிருயே; பேஷ்! ஆனு, உனக்குத் தினம் யாரா வது டெலிபோன் பண்ணுவ துண்டா?"

இப்படி அவர் கேட்டதும் ஜக்கு திடுக்கிட்டான். இவருக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்? இவர் இரவு நேரங்களில் அவன் மாமா விடம் வந்து அரட்டை யடித்து விட்டுப் போவதுண்டு. அதைத் தவிர, பகல் நேரங் களில் வீட்டி லேயே அவரைப் பார்க்க முடி யாது. அவர் விமான நிலை யத்தில் 'பிளை யிங் கிளப்' அங்கத்தினர். விமானம் ஓட்டக் கற்றுக் கொள்கிருர். அவன் மாமா வுக்கே தெரியாத விஷயம் இவருக்கு எப்படித் தெரிந்தி ருக்கும்! ஒரு சமயம் இவரே டெலிபோன் பண்ணுகிருரோ? இல்லாவிட்டால் நந்து எல்லா வற்றையும் சொல்லியிருப்பா னே? சே, நந்து இப்படி ஒரு நாளும் சொல்லிக் கொடுக்க மாட்டான்.

ஜக்கு திடீரென்று பேச்சை மாற்றி, "சார், சார்! என்னை ஒரு நாளைக்கு ஏரோப்பிளே னில் ஏற்றி ஊரெல்லாம் ஒரு தடவை சுற்றிக் காட்டுங்கோ, சார்!" என்முன்.

நந்துவின் சிற்றப்பா கடகட வென்று சிரித்தார். அசல் அது அந்த டெலிபோன் சிரிப்புப் போலவே இருந்தது. ஜக்கு விக்கிப்போய் நின்முன்.

"உன் மாமாவைக் கேட்க வேண்டாமா?"

ஜக்கு தலையை ஆட்டினன். அந்த ஆட்டலுக்கு எப்படி வேண்டுமானுலும் அர்த்தம் செய்துகொள்ள லாம். நந்துவோ, "அடேய் ஜக்கு, மயக்கமா வரும்டா; தலையைச் சுத்தும். வாந்தி எடுக்கும். வேண் டாம்டா" என்முன்.

ஜக்கு அதற்கும் தலையை ஆட்டினன். நந்துவின் சிற்றப்பா ஜக்குவை

அருகில் அழைத்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"பயப்படாதே, நாளைக்கே நான் உன்னை ஏரோப்பிளேனில் ஏற்றிச் சுத்திக் காண்பிக்கறேன். நந்து பயப்படுவான். அவன் கீழேயே நின்று வேடிக்கை பார்க்கட்டும்" என்றார்.

ஜக்குவின் சந்தேகம் குன்றியது. டெலிபோனில் பேசுபவராக இருந்தால் இப்படி ஒப்புக்கொள்வாரா? நிச்சயம் அது வேறு யாரோ தெரியவில்லை.

மறுநாள் காலை பதினொரு மணிக்கு ஜக்கு ஜம்மென்று டிரஸ் செய்துகொண்டான். எதிர் பங்களா வாசலில் நந்துவின் சிற்றப்பாவும் நந்துவும் புறப்படத் தயாராய் இருந்தனர். நல்ல வேளை, ஜக்குவின் மாமா ஆபீசுக்குப் போய் விட்டார். மாமி இவன் எங்கேயோ புறப்படத் தயாராவதைக் கண்டு, "வெயிலில் இப்படி அலைந்தால் உன் உடம்புக்கு ஆகுமாடா?" என்று கேட்டாள்.

மாமியிடம் அவன், "இன்னிக்கு மட்டுந்தான் மாமி! நான் பார்க்காதது எல்லாம் பார்த்துவிட வேண்டாமா? ஊருக்குப் போனால் அங்கே இதெல்லாம் எப்படிப் பார்க்க முடியும்? மாமாவிடம் சொல்ல வேண்டாம், மாமி!" என்று கெஞ்சுதலாகக் கேட்டான்.

மாமி சம்மதித்துவிட்டாள். ஜக்குவுக்கு ரொம்பக் குஷி! குதித்துக்கொண்டே பெல்ட்டை மாட்டிக்கொண்டான்.

"ட்ரிங் ... ட்ரிங் ... கிணு ... கிணு...!"

ஜக்குவின் குஷியெல்லாம் இந்த டெலிபோன் ஒலிக்க



ஆரம்பித்ததும் பறந்து விட்டது. "பூசை வேளையில் கரடியா? சே!" என்று சொல்லிக்கொண்டே டெலிபோனண்டையில் போனான். டக்கென்று ரிஸீவரை எடுத்தான். காதில் வைத்துக் கேட்காமலே மேஜை மீது பொத்தென்று வைத்து விட்டுக் கீழே இறங்கி வந்து விட்டான். "டெலிபோன் மணி அடித்ததே. நீ பேசினாயா?" என்றாள் மாமி. "ஆமாம்" என்றான் ஜக்கு.

"கிரிக்கெட் விளையாடவா போகிறாய்?" என்று கேட்டாள் மாமி சிரித்துக்கொண்டே.

ஜக்கு சிறிதும் யோசனையின்றி, "ஆமாம்" என்றான்.

"மட்டை எடுத்துக்கொள்ள வேண்டாமா?"

"வேண்டாம்; கிளப்பிலேயே நல்ல மட்டை இருக்கிறது. இதைப் புதிதாக ஊருக்கு எடுத்துக்கொண்டு போகப் போகிறேன்" என்றான் சமாளித்துக்கொண்டு.

மாமி அதற்குமேல் அவனைக் கிண்டிக் கேட்காமல் கையில் ஓர் ஆப்பிள் பழத்தைக் கொடுத்தாள். ஜக்கு அதைக் கடித்துத் தின்று கொண்டே வாசலில் ஓடினான்.

ஏரோட்ரோமுக்குப் போகும் வழியில் நந்துவின் சிற்றப்பாவிடம், 'ஏரோப்பிளேன் எப்படிப் பறக்கிறது, எவ்வளவு நாளில் அதை ஓட்டக் கற்றுக் கொள்ளலாம், அமெரிக்காவுக்கும் லண்டனுக்கும் போக எவ்வளவு நாள் பிடிக்கும், நடுவில் எங்கெங்கே இறங்க வேண்டும்?' என்றெல்லாம் கேட்டுக்கொண்டே போனான். அவரும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே வந்தார்.

"சபாஷ்! நந்துவைப்போல அசட்டுப் பிசட்டு என்று கேட்காமல் இந்த மாதிரிக் கேட்கிறாயே; கெட்டிக்காரப் பயலடா, நீ" என்றார் அவர்.

"நந்துவும் கெட்டிக்காரன் தான் சார்" என்றான் ஜக்கு, விட்டுக் கொடுக்காமல்.

நந்துவோ தானும் ஏதாவது கேட்டுத் தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தையும் காட்ட நினைத்தான். "சித்தப்பா, ஏரோப்பிளேன் போற வழியிலே தொப்பென்று 'விங்' ஒடிந்து விழுந்துவிட்டால் என்ன ஆகும், சித்தப்பா?" என்று கேட்டான்.

இருவருக்கும் சிரிப்புத்தான் வந்தது.

"பார்த்தயா, இவன் கெட்டிக் காரத்தனத்தை!" என்றார் சிற்றப்பா.

ஜக்கு சிரித்தான். நந்துவுக்கு உடனே கோபம் வந்துவிட்டது. "இதுக்கு என்னடா சிரிப்பு? இதுவும் தெரிய வேண்டாமா?" என்றான்.

விமான நிலையம் வந்தது. வரிசையாக விமானங்கள் நின்றன. ஒன்று விர்ரென்று சுற்றிக்கொண்டு புறப்படத் தயாராய் இருந்தது. மற்றொன்று கீழே வந்து ஒரு 'ஜர்க்' கொடுத்துத் தரையில் இறங்கி நின்றது. அடேயப்பா! எவ்வளவு பெரிய மைதானம்! எவ்வளவு விமானங்கள்! ஓர் ஆள் கையை ஆட்டிக் காண்பிப்பதும் பைலட் தலையை மூடி, கண்ணாடி போட்டுக்கொண்டு கம்பீரமாய் உட்கார்ந்திருப்பதும் ஜக்குவுக்குப் பிரமிப்பாய் இருந்தன. நந்துவோ மூஞ்சியை 'உர்'ரென்று வைத்துக்கொண்டிருந்தான். அவன் கோபம் இன்னும் தணியவில்லை. ஜக்குவுக்குச் சுற்றிலும் எதைப் பார்த்தாலும் அதிசயமாய் இருந்தது. பளபளவென்று சிலர் துடைப்பதும், பிரயாணிகள் ஏறுவதும் இறங்குவதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல் இருந்தன. கடைசியில் அங்கே இருந்த கான்டீனில் டிபன் பண்ணிவிட்டு அவர்கள் 'பிளையிங் கிளப்'புக்குள் நுழைந்தார்கள்.

அடுத்த அரை மணிக்கெல்லாம் ஜக்கு ஒரு சிறிய ஏரோப்பிளேனில் உட்கார்ந்திருந்தான். நந்துவின் சிற்றப்பாவுங்கூட உட்கார்ந்திருந்தார். நந்து கிளப் வாசலில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏரோப்பிளேன் சுற்றி, எழும்பி, கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனுக்குத் தான் பறப்பதை

விட அவர்கள் பறந்து சென்றது தான் ஆனந்தமாக இருந்தது.

சாயங்காலம் ஜக்கு ரொம்ப நல்ல பிள்ளையைப் போல வீட்டுக்குள் வந்து நுழைந்தான். கையில் ஒரு பெரிய பொட்டலம் இருந்தது. ஜக்குவின் மாமா இன்னும் வீட்டுக்கு வரவில்லை. ஜக்கு காபியைக் குடித்துவிட்டு மாடிக்குப் போனதும் டெலிபோன் மணி ஒலித்ததும் சரியாக இருந்தன. மேஜை மீது இருந்த ரிஸீவர் டெலிபோன் மேலேயே இப்போது இருந்தது.

"ஹல்லோ ஜக்கு!" என்றது குரல்.

"ஏன்?" என்றான் ஜக்கு, எரிச்சலுடன்.

"மத்தியான்னம் மாமியிடம் கிரிக்கெட் விளையாடப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனாயா?"

"ஆமாம்."

"கிரிக்கெட் விளையாடினாயா?"

"ஆமாம், விளையாடினேன்!"

"பொய் சொல்கிறாய் என்கிறேன்; என்ன சரிதானா?"

"இல்லை; நிஜந்தான் சொல்கிறேன்."

"நீ-நந்து-நந்துவின் சித்தப்பா மூவருமாய் ஏரோட்ரோமுக்குப் போனீர்கள். உண்டா இல்லையா?"

ஜக்கு பதில் சொல்லவில்லை. 'இதென்னடா, பெரிய வம்பாய் இருக்கிறது? இது யார்? கதைகளில் வருமே, அதுபோல, பூதமாய் இருக்குமோ?' என்று எண்ணிவிட்டுத் தைரியமாய், "இல்லை; நான் கிரிக்கெட் விளையாடத்தான் போனேன்" என்றான்.

"விமானக் கிளப் ரிஜிஸ்தரில் உன் பெயர் இருந்தால்-? போலீஸில் உன்னை ஒப்படைக்கலாமா?"

"ஆமாம்; என்னை மன்னிச்சுடுங்கோ. நான் தெரியாமல் பொய் சொல்லிவிட்டேன்."

"இனிமேல் பொய் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமோ?"

"தெரியாது!"

"பொய் சொன்னால் அன்றிரவே ஊருக்குப் புறப்படும்படியாகும்!"

"சரி; எனக்குக்கூட இனி இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஊருக்குப் போய்விடுகிறேன்" என்றான் ஜக்கு முடிவாக.

"ஆமாம், அப்படியானால் செலுலாய்ட் பொம்மை வாங்கிவிட்டாயா?"

"வாங்கிவிட்டேன்."

டக்கென்று பேச்சு நின்றது. ஜக்கு கட்டிலில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டான். கடைசியில் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய்ப் படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு கீழே வந்தான்.

"மாமி, மாமி!" என்று கூப்பிட்டான். ஆனால் பதிலே இல்லை. மாமி உள்ளே இருந்தால்தானே?

காகித விளக்கு



நீளமாக ஒரு வர்ணக் காகிதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதை இரண்டாக மடித்துக் கத்தரிக்கோலால் முதல் படத்தில் காட்டியிருப்பதுபோல் கத்தரியுங்கள். பிறகு அந்தக் காகிதத்தைப் பிரித்து அடுத்த படத்தில் இருப்பதுபோல இரண்டு முனைகளையும் ஒட்டுங்கள். விளக்குப் போல இருக்கும். சிறிதாகத் துண்டுக் காகிதம் ஒன்றை வெட்டி, கைப்பிடியைப்போல ஒட்டிவிடவேண்டும்.

நெட்டிப் பொம்மை

பழைய கார்க்குகள், நெருப்புக் குச்சிகள் இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். பெரிதும் சிறிதுமாகக் கார்க்குகள் இருந்தால்தான் பலவிதப் பொம்மைகள் செய்ய முடியும். கார்க்குகள் உடம்பு, தலை, பாதம் முதலியவைகளாகவும் நெருப்புக் குச்சிகள் கை, கால், பிடிப்பு முதலியவைகளாகவும் செய்ய உபயோகப்படும். இதோ படத்தைப் பாருங்கள். இவை மாதிரியும் இன்னும் நாற்காலி, மனிதன், ஆட்டுக்குட்டி, வாத்து, மாடு இப்படிப் பல பொம்மைகளும் அவரவர்களுடைய சாமர்த்தியம் போலச் செய்யலாம்.

வேலி தாண்டாத ஆடு

'சோமசன்மா'

ஒரே ஓர் ஊரில் ஒரு கிழவி இருந்தாள். ஒரு நாள் அவள் தெருவைப் பெருக்கிக்கொண் டிருந்தபொழுது அவளுக்கு இரண்டு பணம் கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு அவளுக்கு என்ன பண்ணுவதென்று தெரியவில்லை. அவளுக்கு வீட்டில் சின்னக் குழந்தைகளே கிடையாது. இருந்தால் ஒரு பலூனாவது வாங்கிக் கொடுத்திருப்பாள்; அல்லது ஒரு ஐஸ் கிரீமாவது வாங்கியிருப்பாள். அவளுக்கு ஒரு சின்னக் குழந்தை கூட இல்லை. அதனால் என்ன வாங்குவதென்று தெரியாமல் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு சந்தைக்குப் போனாள்.

சந்தையில் வாங்குவதற்கு நிறையச் சாமான்கள் இருந்தன. எதை வாங்குவது என்று அவளுக்குத் தெரியவில்லை. வேர்க் கடலையை வாங்கினால் அதை யார் தின்பது? அவள்தான்

பல் இல்லாத கிழவியாயிற்றே? பலாச்சுளை இருந்தது. அதைத் தின்றல் வயிற்றை வலிக்கும். இப்படியாக ஒரு சாமானையும் வாங்காமலே வீட்டுக்குத் திரும்பிவிடலாம் என்று நினைத்தாள். அப்பொழுதுதான் ஒருவன் ஓர் ஆட்டுக்குட்டியை வைத்திருந்தான். அதைப் பார்த்ததும் அவளுக்கு அதை வாங்கவேண்டும் போல் இருந்தது. அவ்வளவு அழகாயிருந்தது அது. அதை விலை கேட்டால் அவனும் இரண்டு பணம்தான் என்று சொன்னன். உடனே அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் போகத் திரும்பினுள்.

அன்று முழுவதும் எந்தச் சாமானை வாங்குவது என்று தெரியாமல் அவள் சந்தை முழுவதும் சுற்றினளா; அவள் வீட்டுக்குத் திரும்பும் பொழுது அஸ்தமிக்கும் சமயம் ஆகிவிட்டது. அவசரம் அவசரமாக வீட்டுக்குத் திரும்பினுள். அவள் வீட்டுக்கு வரும் வழியில் ஒரு சின்ன முள் வேலி உண்டு. அதைத் தாண்டித்தான் அவளுடைய வீட்டுக்கு வந்தாக வேண்டும். அந்த முள் வேலிக்குப் பக்கத்தில் வந்தாள். வந்ததும் ஆட்டுக்குட்டியைப் பார்த்து, "தாண்டிப் போ" என்ருள். ஆட்டுக்குட்டிக்கு முள் வேலியைப் பார்த்ததும் பயமாய் இருந்தது. அது சின்னக் குட்டி தானே? அதன் மேல் முள் குத்திவிடாதா? அதனல் அது பேசாமல் தலையை ஆட்டிக்கொண்டே நின்றது. கிழவி மறுபடியும் ஆட்டுக்குட்டியைப் பார்த்து, "ஏ, ஆட்டுக்குட்டி! நீ வேலியைத் தாண்டுகிருயா இல்லையா?" என்று அதட்டினுள். ஆடு அசையவே இல்லை.

கிழவிக்குக் கோபம் வந்தது. பக்கத்தில் ஒரு குச்சி கிடந்தது. அதைப் பார்த்து, "ஏ குச்சியே, இந்த ஆட்டுக்குட்டி வேலியைத் தாண்டமாட்டேன் என்கிறது. பொழுது இருட்டுவதற்குள் நான் வீட்டுக்குப் போக வேண்டும். அதை முதுகில் ஓர் அடிபோடு" என்ருள். குச்சி பேசவில்லை.

அப்போது அங்கு ஒரு நெருப்பு இருந்தது. அதைப்

பார்த்து, "நெருப்பே, நெருப்பே, கேட்டாயா சேதியை! இந்தக் குச்சி ஆட்டுக்குட்டியை அடிக்கமாட்டேன் என்கிறது. ஆட்டுக்குட்டியோ வேலியைத் தாண்ட மாட்டேன் என்கிறது. எனக்கோ வீடு போவதற்குள் இருட்டிவிடும். நீ இந்தக் குச்சியைக் கொளுத்திவிடு" என்ருள். நெருப்பு அவள் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

மறுபடியும் கிழவி என்ன செய்தாள்? குளத்தில் ஜலம் இருந்தது. அதனிடம் போனுள். அதை நோக்கி, "ஜலமே, ஜலமே! நெருப்பு அந்தக் குச்சியைக் கொளுத்தாதாம். குச்சி ஆட்டுக்குட்டியை அடிக்காதாம். ஆட்டுக்குட்டியோ வேலியைத் தாண்டாதாம். நீ அந்த நெருப்பை அணைத்துவிடு" என்ருள். ஜலம் அவள் சொன்னதைக் கேட்காமல் மூஞ்சியைத் திருப்பிக்கொண்டது.

கிழவியா விடுபவள்! ஒரு காளை மாட்டிடம் போனுள். அதனிடம் ஆதியோடந்தம் கதையைச் சொன்னுள். "நீ அந்தக் கர்வம் பிடித்த ஜலத்தை அப்படியே குடித்துவிடு" என்ருள். காளைமாடு, பாவம், வயலில் உழுத அலுப்பு. ஊர்வம்பு இழுப்பதுதானு அதற்கு வேலை? அது பேசாமல் போய்விட்டது.

அங்கே ஒரு பழுதைக் கயிறு கீழே கிடந்தது. அதைப் பார்த்து, "ஏ கயிறே, இந்தக் காளைமாட்டைப் பிடித்துக் கட்டி விடு" என்ருள். அது லட்சியமே செய்யவில்லை. கிழவிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஓர் எலியைக் கூப்பிட்டு அந்தப் பழுதைக் கயிற்றைத் துண்டம் துண்டமாகக் கடிக்கச் சொன்னுள். எலி நிமிர்ந்துகூடப் பார்க்காமல் போய்விட்டது. அப்புறம் எலிக்கு விரோதி யார் என்று யோசித்தாள். உங்களுக்குத்தான் தெரியுமே, எலிக்கு விரோதி பூனை என்று. அதனுல் பூனையிடம் போய் நடந்ததை யெல்லாம் சொல்லி, "எலியைக் கடி" என்ருள்.

பூனை சொல்லிற்று: "பாட்டி, பாட்டி! கடிப்பதைப்பற்றி இல்லை. பாவம், இந்த வயசில் ரொம்பக் கஷ்டப்படுகிருய்! ஆனுல் நான் நாலு நாளாகப் பட்டினி. நடக்கக்கூடச் சீவன் இல்லை. எலியைக் கடிக்கப் போய், எலி என்னைக் கடித்துவிட்டால் என்ன செய்கிறது? அதனுல்தான் சொல்லுகிறேன். நீ

போய் எங்கேயாவது ஓர் உழக்குப் பால், நல்ல பசும் பாலாகக் கொண்டு வந்தாயானல், நான் போய் எலியை ஒரு கை பார்க்கிறேன்" என்றது.

உடனே கிழவி ஒரு பசுமாட்டிடம் ஓடினள். தன் கதையைச் சொல்லி உழக்குப் பால் கேட்டாள். பசு, "என்னை மேய்க்கும் கோனன் எனக்குப் புல்லே போடுவது கிடையாது. நீ ஒரு பிடி வைக்கோல் கொண்டு வந்து போட்டால் உழக்குப் பால் தருகிறேன்" என்றது.

அதைக் கேட்ட கிழவி சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கே சற்றுத் தூரத்தில் ஒரு வைக்கோல் போர் இருந்தது. அதனிடம் ஓடினள். அவள் ஓடி வருவதைப் பார்த்த வைக்கோல் போர் 'கடகட'வென்று சிரித்தது. அதைக் கண்ட கிழவி, "ஏன் சிரிக்கிருய்?" என்று கேட்டாள்.

அப்போது வைக்கோல்போர், "பாட்டி! நான் இங்கேயிருந்து நடந்ததை யெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். நீ எதற்காக என்னிடம் வந்தாய் என்று எனக்குத் தெரியும்" என்றது.

"எதற்காக வந்தேன், சொல் பார்ப்போம்?" என்ருள் கிழவி.

வைக்கோல் போர் பின்வருமாறு சொல்லிற்று:—"நீ என்னைக் கொண்டுபோய்ப் பசுவுக்குப் போடப் போகிருய். பசு உழக்குப் பால் தரப்போகிறது. அதைக் கொண்டு போய்ப் பூனைக்கு வைக்கப்போகிருய். பூனை எலியைக் கடிக்கப் போகிறது. எலி கயிற்றைத் துண்டமாக்கப் போகிறது. கயிறு காளை மாட்டைக் கட்டப் போகிறது. காளைமாடு தண்ணீரைக் குடிக்கப் போகிறது. தண்ணீர் நெருப்பை அணைக்கப் போகிறது. நெருப்பு அந்தக் குச்சியை எரிக்கப் போகிறது. குச்சி ஆட்டுக் குட்டியை அடிக்கப் போகிறது. ஆட்டுக்குட்டி வேலியைத் தாண்டப் போகிறது. நீ வீட்டுக்குப் போகப் போகிருய் இல்லையா?"

கிழவி பொக்கைவாயைத் திறந்து சந்தோஷத்துடன் சிரித்து, "ஆமாம், ஆமாம்!" என்றாள்.

வைக்கோல் போர் மேலும் சொல்லிற்று: "நீ இவ்வளவு பேரையும் போய்க் கெஞ்சுவதற்குப் பதில் ஒரு காரியம் செய்திருந்தால் இத்தனை நேரம் வீட்டில் போய்ச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கியிருக்கலாம்" என்றது.

"அது என்ன?" என்று கிழவி கேட்க, "அந்த ஆட்டுக் குட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு வேலியை நீயே தாண்டியிருந்தால் இத்தனை நேரம் வீட்டுக்குப் போயிருக்கலாமே?" என்றது வைக்கோல்போர்.

அதைக் கேட்ட கிழவியும், "நீ சொல்வது சரிதான். எனக்கு இது தெரியவில்லையே" என்று சொல்லி ஆட்டுக்குட்டியைத் தூக்கிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தாள்.

ஆகையினால், பிள்ளைகளே! நம்முடைய காரியத்திற்காகப் பிறரை நம்பாமல் நாமே செய்வது எப்போதும் நல்லது. அல்லவா?

பெரியது எது?

உலகத்திலேயே மிகப் பெரிய பிராணி எது?
—திமிங்கிலம்.

அதற்கு அடுத்தது எது?
—யானை.

அதற்கு அடுத்தது எது?
—காண்டாமிருகம்.

பல வருஷங்களுக்குமுன் பிரிட்டிஷ் தீவில் அகப்பட்ட ஒரு பெரிய திமிங்கிலத்தின் நிறை 249 டன்; ஆப்பிரிக்க யானைகளில் மிகப் பெரியது 4 டன் நிறை; மிகப் பெரிய காண்டாமிருகத்தின் நிறை 3 முதல் 4 டன்.

பாலை நிலச் சிறுவர்



ச. கு. கணபதி ஐயர்

இந்தத் தடவை கீல் குதிரை எங்களை இந்தியாவுக்கு மேற்கே உள்ள ஓரிடத்துக்குக் கொண்டு போயிற்று. கண்ணுச்கு எட்டிய தூரம் எங்கே பார்த்தாலும் ஒரே மணல். சில சில பாறைகளும் காணப்பட்டன. மரமோ, புல்லோ ஒன்றும் இல்லை. தூரத்தில் ஜலம் இருப்பதுபோல் தோன்றியது. ஆனால் வெகு தூரம் சென்றும் ஜலம் காணமல் ஏமாந்து நின்றோம்.

அந்தச் சமயம் தூரத்தில் கறுப்பாக ஏதோ வருவதுபோல் தோன்றியது. அருகில் வர வர அது ஒரு பெரிய கூட்டம் என்று தெரிந்தது. விசித்திரமான மிருகங்களின் மீது பொதிகளைப் போட்டுக்கொண்டு பிரயாணிகள் வந்துகொண் டிருந்தார்கள். ராமு அதைப் பார்த்துவிட்டு, “இது பாலைவனம்; ஒட்டகங்கள் வருகின்றன” என்ருன்.

முன்னல் ஒருவன் ஒட்டகத்தின்மேல் இருந்தபடி வழி காட்டிவந்தான். ஒருவர் அழகாக உடுத்துக்கொண்டு ஒரு குதிரையின் மேல் ஏறிவந்தார். அவருக்குப் பக்கத்தில் வந்து கொண் டிருந்த ஒட்டகத்தின் மீது மூன்று சிறுவர்கள் இருந்தார்கள்.

சிறுவர்கள் எங்களைப் பார்த்துவிட்டு அரபி பாஷையில், “அப்பா! எங்கோ இருந்து இரு சிறுவர்கள் வழி தப்பி வந்து

விட்டார்கள்போல் தோன்றுகிறது; இவர்களை நாம் அழைத்துச் செல்லலாமே!" என்று குதிரை மீது ஏறியிருந்தவரைக் கேட்டார்கள். அவர் உடனே எங்களை அழைத்து ஓர் ஒட்டகத்தின் மேல் ஏற்றிவைத்தார். மூன்று பையன்களில் ஒருவன் பேச்சுத் துணைக்கு எங்களோடு வந்துசேர்ந்தான்.



பாலை நிலப் பசுஞ்சோலை

"உங்கள் தகப்பனுரிடம் எங்களைப்பற்றிச் சிபார்சு செய்ததற்கு வந்தனம். நீங்கள் யாரோ?" என்று ராமு கேட்டான். அதற்கு அந்தப் பையன், "என் பெயர் காஸிம்; இவர்கள் என் சகோதரர்கள்; இவன் அப்துல்; அவன் ஹுஸேன்; எங்கள் அப்பாதான் இந்தக் கூட்டத்துக்குத் தலைவர். இது அரபி தேசம். இன்னும் ஒரு மணியில் எங்கள் ஊரைச் சேர்ந்துவிடலாம்" என்றான்

சிறிது நேரத்தில் பசுமையான இடம் கண்ணுக்குத் தோன்றியது. கூட்டத்தார் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர். ஒட்டகங்களும் விரைவாக நடக்கலாயின. "ஊர் சமீபித்துவிட்டதென்று எல்லாருக்கும் ஆனந்தம்!" என்றான் காஸிம். "இந்தமாதிரிதான் எங்களுக்கும் முன்பு தோன்றியது. நாங்கள் அதை நோக்கிச் சென்று ஏமாந்துபோனோம்' என்றேன் நான். "நீங்கள் பார்த்தது கானல். பாலை நிலத்தில் வெயில் ஏற ஏற அப்படித் தோன்றிப் பிராணிகள் ஏமாந்து போவதுண்டு" என்றான் காஸிம்.

ஓரிடத்தில் சில ஈச்ச மரங்கள் இருந்தன. தெளிவான ஊற்று நீர் அங்கே இருந்தது. வெள்ளை அடித்த மொட்டை மாடி வீடுகள் சிலவற்றைக் கண்டோம். கூட்டம் அங்கே நின்று விட்டது. அப்துலும் ஹுஸேனும் எங்களுடன் வந்து கலந்து

அரபுக் கூட்டத் தலைவன்

கொண்டார்கள். "அப்பாடா! இந்த இடம் எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது!" என்ருன் ராமு.

அவிழ்த்து விட்ட ஒட்டகங்கள் பரபரப்புடன் நீர் ஊற்றுக்குச் சென்று ஜலம் குடித்ததை நான் பார்த்து விட்டு, "அவைகளுக்கு என்ன ஆத்திரம், பாருங்கள்!" என்றேன். அதற்கு அப்துல், "ஒரு தடவை ஜலம் குடித்துவிட்டால் பிறகு ஐந்தாறு நாள் ஒட்டகத்துக்குத் தாகமே எடுக்காது; ஆறு நாள் பிரயாணத்துக்குப் பிறகு இவை இப்பொழுதுதான் தண்ணீரைப் பார்க்கின்றன" என்ருன்.

நாங்கள் கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு ஒரு வீட்டுக்குள் சென்ருேம். ஒருவன் சில தட்டுகளில் எங்களுக்கு ஈச்சம் பழமும், பாலடைக் கட்டியும், சிறிது ரொட்டித் துண்டும் இறைச்சியும் கொண்டுவந்து வைத்தான். "பாலடைக் கட்டிக்கு உங்கள் ஊரில் பால் ஏது?" என்று நான் கேட்டேன். "இங்கே ஒட்டகந்தான் எங்களுக்குப் பசு" என்ருன் அவன்.

சாப்பிட்டுக்கொண்டே, "சிறுமிகள் எவரும் காணுேமே!" என்று ஆச்சரியம் கொண்டு நாங்கள் கேட்டோம். அதற்கு ஹுஸேன், "அவர்கள் அடுத்த அறையில் தாயாருக்கு உதவி செய்துகொண்டு இருக்கிருர்கள். இந்த நாட்டில் பெண்கள் கோஷா முறையை அநுசரிக்கிறவர்கள். ஆண்கள் அவர்களைப் பார்க்கக்கூடாது" என்ருன்.

"உங்கள் சிறுமிகள் பள்ளிக்கூடம் போவதில்லையா?" என்று ராமு கேட்டான். அதற்குக் காஸிம், "போவதில்லை; வீட்டிலேயே ஒட்டக மயிரினுல் துணி நெய்யவும், சமையல் செய்யவும் அவர்கள் கற்றுக்கொண்டு தாயாருக்கு வீட்டுக் காரியங்களில் உதவியாக இருப்பார்கள்" என்ருன்.

போஜனம் முடிந்ததும் வெளியே கூடாரத்துக்கு

வந்து சேர்ந்தோம். அங்கே கம்பள உடைகளைப் பார்த்து விட்டு நான், "வெயில் கடுமையாக உள்ள உங்கள் நாட்டில் கம்பளி எதற்கு?" என்றேன். இதைக் கேட்டுவிட்டு மூன்று சகோதரரும் கொல்லென்று சிரித்தார்கள். "இரவில் ஒரே குளிர் அடிக்கப்போகிறது; உங்களால் பொறுக்க முடியாத அவ்வளவு குளிர்!" என்றான் ஹுஸேன்.

"பொழுது போக ஏதேனும் விளையாடலாமே!" என்று நான் கேட்டேன். "எங்களுக்கு மரம் தொத்துவதில் பிரியம் அதிகம்; ஈட்டிச் சண்டை எங்களுக்கு ஒரு விளையாட்டு; குதிரைச் சவாரியும் ஒரு பொழுதுபோக்கு" என்றான் காஸிம்.

ஈட்டிச் சண்டையைக் காண நாங்கள் ஆசை கொண்டோம். அதனால் அவர்கள் அதைச் செய்து காட்டினார்கள். அது நன்றாக இருந்ததைப் பார்த்துவிட்டு, "இதனால் உங்களுக்குப் பிற்காலத்தில் என்ன உபயோகம்?" என்று கேட்டோம். அதற்கு அவர்கள், அங்கே அடிக்கடி கொள்ளைக்காரர் உபத்திரவம் அதிகம் என்றும், அதனால் அவர்களை எதிர்ப்பதற்கு இளமையிலிருந்து சிறுவர்கள் பழக்கப்படுகிறார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்.

"உங்கள் பள்ளிக்கூடத்தைப் பார்க்கவேண்டுமென் றிருக் கிறது" என்றான் ராமு. அதற்கு அப்துல், "இன்று விடுமுறை நாள். பள்ளிக்கூடத்தில் நாங்கள் எங்கள் வேதமாகிய குர்ரானிலிருந்து இசையுடன் பாடக் கற்றுக்கொள்ளுகிறோம். நக்ஷத்திரங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளுவோம்" என்றான். "வெயில் அதிகமானபடியினால் நாங்கள் பிரயாணம் செய்வ தெல்லாம் இரவில்தான். நக்ஷத்திரங்களைக் கொண்டுதான் நாங்கள் வழி தெரிந்துகொள்ளுகிறோம்" என்றான் காஸிம்.

இதற்குள் ஹுஸேன் ஓடோடிப் போய் ஒரு புத்தகம்

கொண்டுவந்தான். "எங்களுக்கு உங்கள் பாஷை பேசத்தான் தெரியும்; படிக்கத் தெரியாது" என்றேன் நான். ராமு புத்தகத்தைத் திருப்பிப் பார்த்தான். அப்பொழுது ஹுஸேன், "புத்தகத்தை அப்படித் தலைகீழாக வைத்துக்கொண்டா பார்க்கிறது!" என்று சொல்லிவிட்டுக் கடைசிப் பக்கத்திலிருந்து படிக்கவேண்டும் என்று காட்டினான்.

"இந்தமுறை, ஜப்பான் புத்தகங்களில் உள்ளபடிதானே?" என்றான் ராமு. "ஜப்பான் புத்தகத்தில் வரி மேலிருந்து கீழ் நோக்கி வரும்; இவர்கள் பாஷையில் வலமிருந்து இடமாகக் குறுக்கே இருக்கிறது" என்றேன் நான்.

இதற்குள் மாலை நேரம் வந்துவிட்டது; அராபியர் எல்லாம் அங்கங்கே தனித்தனி விரிப்புக்களை விரித்துக் கொண்டு அதில் கிழக்கு நோக்கி மண்டியிட்டு உட்கார்ந்த வண்ணம் பிரார்த்தனை செய்தார்கள். சிறுவரும் பிரார்த்தனையில் கலந்துகொண்டார்கள்.

இரவில் சிறுவரின் தகப்பனார் எங்களுக்குச் சில கதைகளைச் சொன்னார். அரபிக் குதிரைகளைப்பற்றியும் ஒட்டகங்களைப்பற்றியும், கொள்ளைக்காரக் கூட்டத்தைப்பற்றியும் அந்தக் கதைகள் சுவாரசியமாக இருந்தன.

ஹுஸேன் கூறியபடி எங்களால் குளிரைப் பொறுக்கவே முடியவில்லை. கம்பளிப் போர்வையைப் போர்த்துக்கொண்டு கூடாரத்தின் ஒரு மூலையில் முடங்கி விட்டோம். அடுத்த கூடாரத்தில் யாரோ இனிய குரலில் குர்ரானிலிருந்து பாடுவதைக் கேட்டுக்கொண்டே சில நிமிஷங்களில் தூங்கிவிட்டோம்.

ஒரே கூச்சல் கேட்டுப் பாதி இரவில் விழித்துக்கொண்டு வெளியே வர முயன்றோம். காஸிம் ஓடிவந்து, "மணல் புயல் அடிக்கிறது; வெளியே போகவேண்டாம்" என்றான். அவன் சொன்னது ஒன்றும் எங்களுக்கு விளங்கவில்லை. பிறகு அவன், பாலைவனத்தில் பெருங் காற்றடித்து மணல் மலை போல் பல இடங்களில் குவிந்துவிடும் என்றும், பிரயாணம் செய்யும் ஒட்டகக் கூட்டமே சில சமயம் புதைந்துபோவதும் உண்டு என்றும் காஸிம் விளக்கினான்.

"இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் இந்தப் பாலை நிலத்திலும் மனிதர் சந்தோஷமாக இருக்கிறார்களே!" என்று நானும் என் நண்பனும் பேசிக்கொண்டோம். பாலை நில வாழ்க்கையை நினைத்தால் இப்பொழுதுகூடப் பயமாக இருக்கிறது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(R) 11. ராமபத்திரன், K.A., சாந்தோம்; 12. ராமசந்திரன், வெ. து., குகை; 13. ராமதாஸ், எஸ். எஸ்., புரசைவாக்கம்; 14. ராமதாஸ், T., கொல்லம்; 15. ராமகிருஷ்ணன், T.V., புதுச்சேரி; 16. ராமமூர்த்தி, S., கும்பகோணம்; 17. ராமன் A., செட்டிநாடு; 18. ராமாநுஜம், R., ஸ்ரீரங்கம்; 19. ராமப்ரசாத், போத்தனூர்; 20. ரங்கன், S. A., பர்ஹாம்பூர்; 21. ரங்கநாதன், கெ. கி., மதுரை. 22. ரங்கநாயகி, R., வரிச்சகுடி; 23. ரங்கராஜன், B., திருச்சி; 24. ரங்கராஜன், C. H., செங்காட்டுப்பட்டி; 25. ருத்திரமூர்த்தி, அணலவை, தின்னனூர். (S) 1. சதாசிவம், A., புளியகுளம்; 2. சதாசிவம், ப. வ., குமாரபாளையம்; 3. சகுந்தலா, T. N. V., தாம்பரம்; 4. சம்பந்தமூர்த்தி, ந., கறுப்புகிளார்; 5. சங்கர், S., ராயப்பேட்டை; 6. சந்தானம், டி., கோவை; 7. சர்வேசுவரன், S., ராயப்பேட்டை; 8. சத்தியவான் V., பழயம்பட்டி; 9. சாவித்திரி, G., செட்டிநாடு; 10. சேகர், R. C., வளவனூர்; 11. சென்னகிருஷ்ணன், K. V., வடகுபட்டி; 12. செங்கோடன், V., திருச்செங்கோடு; 13. ஷேக் முகமுத், H., வண்ணாரப்பேட்டை; 14. சண்முகம், K., திருப்பத்தூர்; 15. சிங்காரவேலு, T.R., மயிலாப்பூர்; 16. சிவமயம், P., திருவண்ணாமலை; 17. சிவராஜ், B.N., கோயம்புத்தூர்; 18. சிவராஜன், D., சுண்ணாம்புப்பேட்டை; 19. சிவராமகிருஷ்ணன், G., பழவங்குடி; 20. சிவராமன், A.V., வாலாஜாபாத்; 21. சோமேசுவரன்; V., மயிலாப்பூர்; 22. சீனிவாசன், D., தியாகராயநகர்; 23. சீனிவாசன், C.N., தேனாம்பேட்டை; 24. சீனிவாசன், R., டில்லி; 25. சீனிவாசன், S., கும்பகோணம். 26. சீனிவாசன், K.T., மன்னார்குடி; 27. சுப்பிரமணியன், ரா., சென்னை - 21; 28. சுப்பிரமணியன், S., சன்னநல்லூர்; 29. சுப்பிரமணியன், K. V., அம்பாசமுத்திரம்; 30. சுப்ஹான் ஷரீப், S., கோயம்புத்தூர்; 31. சுதர்சன், இ. ரா., அறந்தாங்கி; 32. சுமதி, S., புதுச்சேரி; 33. சுந்தரம், K., புது டில்லி; 34. சுந்தரம், S., புதுக்கோட்டை; 35. சுகந்தமூர்த்தி, புதுக்கோட்டை; 36. சுந்தரராஜன், M., ராமநாதபுரம்; 37. சுந்தரேசன், G., திருவனந்தபுரம்; 38. சுந்தரேசன், S., சேலம்; 39. சுயம்பிரகாசம், S., திருவேங்கடநாதபுரம்; 40. சையத்

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

மார்ச்சு '50

அப்துல் ரஹீம், S., மதுரை; 41. சீதா, S., சேலம். (T) 1. தாண்டவமூர்த்தி, M., ஒட்டபாளையம்; 2. தங்கப்பாண்டி, K., கோயில்பட்டி; 3. தங்கசாமி, P., ராமநாதபுரம்; 4. தாயம்மாள், கோ., திருத்தங்கல்; 5. தாயம்மாள், P., இலஞ்சி; 6. திருநாவுக்கரசு, N., மந்தைவெளி; 7. திரிபுரசுந்தரி, C. N., மயிலாப்பூர்; 8. துளசி, P., புதுச்சேரி. (V) 1. வன்னியராஜன், த., சின்னமனூர்; 2. வேதகிரி, R. V., உடுமலைப்பேட்டை; 3. வீரராகவன், V., திருநெல்வேலி; 4. வேங்கடாசலம், ஜலகண்டபுரம்; 5. வேங்கடாசலம், K., நாகர்கோயில்; 6. வேங்கடாசலம், S., கறுப்புக்கிளார்; 7. வேங்கடராஜன், N., வட மதுரை; 8. வேங்கடராமன், T. K., ஆலப்புழை; 9. வேங்கடராமன், ரா., மன்னார்குடி; 10. வேங்கடரமண ராவ், R., மயிலாப்பூர்; 11. வெற்றிவேல், ஒ. சே., கோபிசெட்டிப்பாளையம்; 12. வித்தியார்த்தனம், M. R., கோயம்புத்தூர்; 13. விஜயராகவன், V., கோயம்புத்தூர்; 14. விஜயரங்கன், S., விழுப்புரம்; 15. விசுவநாதன், K., அறந்தாங்கி. 16. விசுவநாதன், B S., உடுமலைப்பேட்டை; 17. விவேகானந்தன், மா., பாளையங்கோட்டை; (Y) 1. யோகநாதன், வே., யாழ்ப்பாணம்.

(A) 9. அநசூயா, V., மயிலாப்பூர். 10. அனந்தகிருஷ்ணன், N., திருவனந்தபுரம். 11. அனந்தராமன், R., மயிலாப்பூர். 12. அலமேலு S., பாலசுப்ரமணியன், S., தின்னனூர். 13. அப்துல் மஜீத், A. S. K., ஏர்வாடி. 14. அண்ணமலை, அரு., கானாடுகாத்தான். 15. அன்பழகன், சு., மதுரை. 16. அமீர்ஹம்ஸா, M. K. M., தாஜுதீன், ஆரீபா, கம்பம். 17. அருணசலம், ஜ., கண்டி. (B) 10. பாஸ்கரன், D., மேலமையூர். 11. பாஸ்கரன், K., சோளிங்கபுரம். 12. பாலசுப்பிரமணியன்., சி., நீர்ப்பழனி. 13. பாலசுப்பிரமணியன், மு., காரைநகர். 14. பாரதன், கோல லெப்பீஸ். 15. பாலசுப்பிரமணியன், S., கும்பகோணம். 16. பாலசுப்பிரமணியன், M. K., சென்னை, 14. 17. பாலசுந்தரி, N., மயிலாப்பூர். 18. பாகீரதி. S., செகந்திராபாத். 19. பாலசுப்பிரமணியம், S., பெரம்பூர். 20. பாரதி, V. J., சிவகுமார், V. S., மயிலாப்பூர். 21. பாஸ்கரன், D., குடியாத்தம். (C) 6. சொக்கலிங்கம், ரா., சேலம். 7. சந்திரமௌலி, K., மயிலாப்பூர். 8. சந்திரசேகரன், K. பன்ருட்டி. 9. சிதம்பரம், M. A. ஜனார்த்தனன், சிவகாசி. (D) 6. தர்மாம்பாள், N., சென்னை, 1.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

அடுத்த இதழ்

ஏப்ரல் 1-ஆம் தேதி

வெளிவரும்

மே மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் இங்கிலீஷ் முதல் தேதி வெளிவரும்.

★★★★★★★★★★★★★★★

பாழடைந்த பங்களா

'வாண்டு மாமா'

காட்சி 1

[கோபு கோடை விடுமுறைக்கு மாமாவின் ஊருக்கு வந்திருக்கிறான். அன்று இரவு கோபு, அவன் மாமா, அவர் பையன் சீனு, பெண் பட்டு எல்லாரும் நிலவில் உட்கார்ந்திருக்கிறார்கள்.]

கோபு: ஏன் மாமா, ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வரும் வழியிலே ஒரு பெரிய பங்களாவைப் பார்த்தோமே, அதிலே யாரு இருக்கா?

பட்டு: அந்தப் பிசாசுப் பங்களாவைச் சொல்லறயா?

கோபு: பிசாசுப் பங்களாவா?

மாமா: பிசாசாவது கிசாசாவது, கோபு! ஆனா இந்த ஊர் ஜனங்கள் எல்லாம் அதைக் கண்டு நடுங்கறாங்க. இருட்டினா அந்தப் பக்கம் தனியாகப் போக மாட்டாங்க. நான் மாத்திரம் எவ்வளவோ தடவை போயிருக்கேன்.

பட்டு: ஐயோடி! அதைப் பார்க்கவே பயமா இருக்கும். ஒரே புதரும் செடியும்; அப்பப்பா!

மாமா: அது என்னவோ உண்மைதான். அந்த ஜமீன்தார் பங்களா பத்து வருஷமாகக் கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடக்கிறது. ஜமீன்தார் நாதமுனிக் கவுண்டர் இறந்த பிறகு அவரது சொத்து விஷயமாய் ஏற்பட்ட பூசலில் இந்தப் பங்களாவைச் சர்க்கார் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

காட்சி 2

கோபு: சீனு, கிராமத்தைச் சுத்திப் பார்த்துட்டு வரலாமா?

சீனு: சரி அப்படியே வாய்க்காலில் போய் நீச்சமடித்து விட்டு வரலாம்!

கோபு: ரைட்!

சீனு: கோபு, நேத்து மாமா சொன்ன பாழடைந்த பங்களா அதோ தெரியறது, பார்.

கோபு: வாடா, கிட்டப்போய் நன்னாப் பார்க்கலாம்........ எவ்வளவு பெரிய வீடு! அரண்மனை போலன்னா இருக்கு? டேயப்பா. எத்தனை பெரிய இரும்புக் கதவு!

சீனு: உள்ளே போகலாமாடா?

கோபு: யாரானும் பார்த்து ஏதாவது சொன்னா?

சீனு: யாருடா வரா இங்கே! வந்தாலும் நாம்ப இருக்கிறது யாருக்கும் தெரியாது. ஒரே புதர்.

கோபு: அதோ அந்தக் கம்பி இடுக்கு வழியாக நுழைந்து போயிடுவோம். ஒரு காலத்திலே

இந்தப் பங்களா எப்படி இருந்த தோ! இப்போ காடு மாதிரி செடியும கொடியும் மரமும் வ ள ர் ந் து பங்களாவையே மூடிண்டு இருக்கே.

[இருவரும் மெதுவாக உள்ளே போகிறார்கள். ஊ என்று காற்று வீசுகிறது. காய்ந்த சருகுகள் பறந்து வரு கின்றன.]

கோபு: முதல் ஹாலைத் தவிர மத்த ரூம்கள் பூட்டி இருக் கப்பா.

சீனு: சரி வா. பங்களாவை வெளியிலே போய் ஒரு சுத்துச் சுத்தி வரலாம்.

கோபு: சீனு... இரு, இரு! (மாடியிலே பெட்டியை உடைப்பது போன்ற சத்தம் கேட்கிறது.)

சீனு: ஆமாண்டா! அதிசயமா இருக்கே! ஒரு வேளை எலியாக இருக்குமோ?

கோபு: எலி பூனையா இருந்தா இப்படிச் சத்தம் வராதே... இரு. (உரத்த குரலில்) யாரது மேலே? (எதிரொலி கேட்கிறது. பெட்டி உடைப்பது போன்ற அந்தச் சத்தம் நின்று விடுகிறது.)

கோபு: அந்தச் சத்தத்தைக் காணோமே?

சீனு: சரி, வா நாழியாச்சு. நாம் போகலாம்.

காட்சி 3

[அன்றிரவு சீனு, கோபு, பட்டு மூவரும்.]

பட்டு: ஒருவேளை பிசாசுதான் அப்படிச் சத்தம் போட்டிருக்கு மோ என்னவோ! உள்ளே போய்ப் பார்க்க உங்களுக்குப் பயமாக இருந்ததோ?

கோபு: எங்களுக்குப் பிசாசிலே நம்பிக்கையும் இல்லே, பயமும் இல்லேன்னு எத் தனை தடவை சொல்றது?

பட்டு: ஏன் இப்படிப் புளுகறேள்? பயம்னு சொல் லிக்கக் கூடாதோ? (சிரிக் கிறாள்.)

சீனு: இந்தா பட்டு, சும்மாக் கேலி பண்ணாதே! நாளைக்குப் போய் உள்ளேயே புகுந்து சுத்தியடிச்சுட்டு வராட்டா எங்க பேரை மாத்தி வைச்சுடு; ஆமாம்!

காட்சி 4

சீனு: டேய் கோபு. ஜாக்கிர தையா ஏறி வா. ஜன்னல் கதவு புட்டுக்கப் போவுது. (உள்ளே குதிக்கிறான்)...ஆ..ரைட்டோ!

கோபு: என்னடா சீனு, எல்லா ரூம்களும் பூட்டி இருக்கேடா. எப்படிடா சுத்திப் பார்க்கறது?

சீனு: இதோ திறந்துவிடுகி றேன், பார், (பூட்டை உலுக்க, அது திறந்துகொள்கிறது) சரி, திறந்தாச்சு...

கோபு: ஐயே! ஒரே வௌ வால் நாத்தம் குடலைப் புரட்டுதே! அதோ அங் கொரு கதவு பாதி திறந் திருக்கே. இந்தப் பக்கம் வா... அடேடே.. மாடிப்படி...... (இருவரும் ஏறுகிறார்கள்.)

சீனு: இதென்ன, இந்தப் பெட்டி...ஒரே காகிதங்கள்... எல்லாம் பழைய பத்திரிகைகள்!

கோபு: சீனு, இதைப் பார். அந்தக் காகிதமெல்லாம் பழுத்

துப்போய் இருக்கு; ஆனா இதோ (ஒன்றை எடுத்துக் காட்டுகிறான்.) இந்தக் காகிதம் புதியது. தினசரிப் பத்திரிகை. தேதியைப் பார்த்தியா, ஆச்சரியமா இல்லே? முந்தா நாள் வெள்ளிக்கிழமைப் பேப்பரப்பா. எப்படி இங்கே, இந்த மாடி அறையில் வந்து கசங்கிக் கிடக்கிறது? யாரோ இங்கு வந்திருக்க வேண்டும்.

சீனு: அதே ஆள்தான் இந்தப் பெட்டியை உடைச்சுப் பழைய பத்திரிகைகளை எல்லாம் இறைத்திருக்கணும். இந்தப் பாழடைந்த காலி வீட்டில் திருட ஒண்ணும் கிடையாதே!

கோபு: சரி வா; மத்த ரூம்களையும் பார்ப்போம். இன்னும் ஏதாவது விசேஷம் இருக்கும்.

(இன்னும் சற்றுத் தூரம் போகிறார்கள்.)

கோபு: அடே! இதோ பார் ஒரு குளம். ஒரே பாசியும் செடியுமான்னா இருக்கு! ஆனா நாலு புறமும் சுவர் அழகா, சித்திர வேலைப்பா...

சீனு: உஸ்....ஸ்.. யாரோ வர மாதிரி இருக்கு... (மெதுவான கட்டைக் குரலில்) புதரில் ஒளிந்துகொள்.

(காலடிச் சத்தம் கேட்கிறது.)

சீனு: (ரகசியமான குரலில்) அதோ ஒரு முரடன்; அவனைப் பார். திருட்டு முழி முழிக்கிறான்!

கோபு: ரொம்பப் பழக்கப்பட்டவன் போல நாம் ஏறிக் குதிச்ச ஜன்னல் வழியா ஏறி உள்ளே குதிக்கறானே. இடுப்பிலே கத்தி...கையிலே சுத்தி...

சீனு: அடே, நாம்ப இப்பவே போய் இதை அப்பாகிட்டச் சொல்லலாம் வா.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 5

கோபு: நெஜமா மாமா இதோ, இந்தப் பத்திரிகையைத்தான் அங்கே முதல்லே பார்த்தோம்.

சீனு: அப்பா, அவன் திருடன் மாதிரிதான் இருக்கான்.

மாமா: திருட அங்கே தைரியமாய் எவன்டா வருவான்? சர்க்கார் சீல் வேறே வச்சிருக்கா... சரி; எதுக்கும் போய்ப் பார்ப்போம்; வாருங்கள்..ம்.. சீனு, நம்ம முனியனையும் கறுப்பனையும் கூப்பிடு.

(சீனு போய்க் கறுப்பனையும் முனியனையும் அழைத்து வருகிறான்.)

கோபு: மாமா, நாம் போவதற்குள் இருட்டிவிடும். பாட்டரி லைட்டை எடுத்துக்கோங்க.

காட்சி 6

[மாமா, முனியன், கறுப்பன், சீனு, கோபு.]

மாமா: (ரகசியமான குரலில்) முனியா, சத்தப்படுத்தாமே ஏறி உள்ளே குதி... மெதுவா, ஜாக்கிரதை. (எல்லாரும் அடி மேல் அடி வைத்து நகருகிறார் கள். அதே சமயம் மாடிப் படியில் ஆள் இறங்கி வரும் சத்தம் கேட் கிறது.)

கோபு: (மெதுவாக) மாமா, அதோ யாரோ மாடிப்படியில் இறங்கி வரா...

மாமா: (மெதுவாக) முனியா, கறுப்பா! அப் படியே சுவரோடு ஒண் டிக் கொள்ளுங்கள்... அந்தப் பாட்ரி லைட்டை இப்படிக் கொடு.

(காலடிச் சத்தம் இன் னும் அருகே கேட் கிறது.)

மாமா: (பலமாக) நில், அப்படியே. நகர்ந்தால் தொலைந்தாய். (பொத் தென்று ஒரு மூட்டை விழுவதுபோல் சத்தம். அந்த முரட்டு ஆளைப் பிடித்து விடுகிறார்கள் வேலைக்காரர்கள்.) கோபு, இந்தப் பாட்ரி லைட்டை அவன் முகத்துக்கு நேராகப் பிடித்துக் கொண்டிரு... கறுப்பா, அவன் கையைப் பின் னால் சேர்த்துக் கட்டு. முனியா, அந்த மூட்டை யைப் பிரி. (முனியன் மூட்டையைப் பிரிக்கும் போது கலகலவென்று சத்தம் கேட்கிறது.)

சீனு: அப்பா! என்ன, பணமும் நகையுமா?

மாமா: முனியா, கறுப்பா, ஜாக்கிரதை! ஆள் திமிறுகிருன். பார். சேர்த்துக் கட்டி இழுத்து வாருங்கள்......கோபு, சீனு, நீங்கள் இப்படியே வீட்டுக்குப் போங்கள். நான் இந்தத் திருட்டுப் பயலேயும் பணத்தையும் அடுத்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனிலே சேத்துட்டு வந்துடறேன்.

காட்சி 7

[இரவு 10 மணி. மாமா திரும்பி வருகிருர்.]

மாமா: அடே பயல்களா, இன்னமுமா தூங்கவில்லே?

கோபு: எப்படி மாமா தூங்கறது?...அது சரி, மாமா. அந்தப் பாழடைந்த பங்களாவிலே அத்தனை பணம் ஏது மாமா? அதைச் சொல்லுங்க முதல்லே.

மாமா: அதுவா? சொல்றேன். நாலேந்து மாதத்துக்கு முன்னலே, நம்மபக்கத்து ஊர்ச் சிலோன் செட்டியார் பங்களாவிலே பெரிய திருட்டு நடந்துதே, ஞாபகம் இருக்கா?

பட்டு: ஆமா, ஆமா, லட்ச ரூபாய்க்கு மேலே போயிடுத்துன்னு பேசிக்கிட்டாங்களே; அதுதானே?

மாமா: ஆமா; அதுவேதான். அந்தத் திருட்டு சம்பந்தமா யார் யாரையோ பிடிச்சு ஜெயிலுக்குள்ளே தள்ளினுங்க. ஆனு, சொத்து மட்டும் ஆம்புடல்லே. இந்த ஆளு ஒரு பழைய கேடி. அங்கே இவனேடு பழகின ஒரு திருடனுக்கு ஏதோ சீக்கு வந்துட்டுது. சாகிற நிலைமை. அவன் கடைசியில் இவனைக் கூப்பிட்டு ரகசியமாக, விஷயத்தைச் சொல்லியிருக்கிருன். அவன்தான் சிலோன் செட்டியார் வீட்டில் திருடியவன். இந்தப் பய போன வாரந்தான் ஜெயிலே விட்டு வெளியே வந்திருக்கான். நேரே நம்ம ஊரு பங்களாவை வட்டமிட ஆரம்பிச்சுட்டான். தேடறது கஷ்டமா இருந்திருக்கு. நேத்து அந்தப் பெட்டியை உடைச்சான். நீங்க சத்தம் போடவே ஆள் ஓடிட்டான். இன்னிக்கு மறுபடி சோதனை போட வந்தப்போ வசமா மாட்டிக்கிட்டான்.

கோபு, நீயும் சீனுவும் சரியான சாமர்த்தியசாலிகள். உங்களை மெச்சிச் சிலோன் செட்டியார் ஆளுக்கு நூறு ரூபாய் பரிசு தருவதாச் சொல்லியிருக்கிருர். போலீஸில் வேறு உங்களுக்கு இனம் கிடைக்கும்.

கோபுவும் சீனுவும்: இனிமேலாவது அந்தப் பங்களாவில் பிசாசு கிடையாதென்பதைப் பட்டு நம்புவாளா? கேளுங்கள்.

பட்டு: நான் பிசாசு இருக்குன்னு சொன்னதனுலே தானே நீங்க திருடனைப் பிடிக்க முடிஞ்சுது? அதுனலே உங்க வெகுமதியிலே எனக்கும் பங்கு உண்டு. (சிரிப்பு)

[திரை.]

அணில்

தி. ஜ. ர.

டிங்! டிங்!

மணி இரண்டு அடித்தது.

"கிச்! கிச்!" என்று கத்திக் கொண்டு அணில்கள் வந்துவிட்டன. குமார் டிபன் சாப்பிடும் நேரம் இதுதான். தினம் அணில்களுக்கு அவன் சிறிது டிபன் போடுவான். இது வழக்கம்.

"கிச்! கிச்!"

கண்ணன

இது என்ன தெரியுமோ? "நாங்கள் ஆஜர்" என்று அணில்கள் தெரிவிக்கின்றன. அதுதான் இந்தக் 'கிச்! கிச்' என்ற சத்தம்.

குமாருக்கு இன்று என்னவோ கவலை; அவன் எங்கேயோ ஞாபகமாக இருந்தான்.

ஜன்னலில் ஓர் அணில் வந்து எட்டிப் பார்த்தது. மற்றொன்று அங்கும் இங்கும் தாவியது; டான்ஸ் ஆடியது.

"கிச் கிச் - கீச் கிச் - கிச் கீச்! என்ன குமார், மணி இரண்டு ஆகி விட்டதே. சாப்பாடு, வேலை, விளையாட்டு எதுவானாலும் சரி; டயம் என்றால் டயம்தான். மணிக்கணக்குத் தவறலாமோ? டிபன் டப்பாவைத் திற, ராஜா" என்றன அணில்கள்.

குமாருக்கு அணில் பாஷை புரியாது. 'கிச்! கிச்!' என்ற சத்தம் தெரியும். அதைக் கொண்டு அவன் புரிந்துகொண்டான். சிரித்துக்கொண்டான். டிபனை எடுத்தான். அவைகளுக்குக் கொஞ்சம் போட்டான்; தானும் சாப்பிட்டான்.

இவ்வளவு அன்போடு டிபன் போடுகிறானே; எத்தனை நாளாய்ப் போடுகிறானே? மரப்னும் அணில்களுக்குப் [illegible]வி தான்; இவன் கிட்ட வருவ[illegible] சின்னக் குஞ்சாக இருக்கும் பழகிய அணில்தான் மனிதரிடம் வரும். இவை அப்படி வருமா? இது தெரியவில்லை குமாருக்கு. 'ஓர் அணிலைப் பிடித்துவிட வேண்டும்; பழக்க வேண்டும்' என்று அவனுக்கு ஆசை.

இந்த அணில்கள் எங்கே இருக்கின்றன; எப்படி வாழ்கின்றன? இந்த விஷயங்களை அவன் கண்டுபிடிக்க முயன்றான். முடியவில்லை.

தோட்டத்திலே ஒரு மாமரம் இருந்தது. அதில்தான் இந்த அணில்கள் வாழ்ந்தன.

உலகத்திலே நூறு வகை அணில் உண்டு. ஆஸ்திரேலியா கண்டத்தில் மாத்திரம் அணில் கிடையாது; மற்ற எல்லா இடத்திலும் உண்டு. மரப் பொந்தில் சில அணில் வாழும். தரையிலே வளையில் சில அணில்

பிறந்த ஒரு வாரத்தில்

ஒரு மாதத்தில்

வாழும். அநேக அணில் அருமையான கூடு கட்டும். மரக்கிளைகள் இரண்டு கவையாகப் பிரியுமே, அங்கேதான் பெரும்பாலும் ச[illegible] பட்சிக் கூடெல்லாம் [illegible]றுப் போகும்; அப்படி [illegible]கும் அணில் கூடு. நம் வீட்[illegible]லே வாசல் புறம், கொல்லைப் புறம் இரண்டு பக்கத்திலும் வழிகள் இருக்கின்றன. இதேமாதிரி தான் அணில் கூட்டிலும் இரண்டு வழிகள் உண்டு. எதற்காகத் தெரியுமா? யாராவது சத்துரு வந்தால் ஓடிப் போக வேண்டாமா? அதற்காகத்தான் இரண்டு வழிகள். வாசலிலே சத்துரு வந்தால், கொல்லைப்புறமாக ஓடலாம்; கொல்லைப்புறத்தில் சத்துரு வந்தால் வாசலிலே ஓடலாம். அணில் அவ்வளவு முன் ஜாக்கிரதை உள்ள பிராணி.

குமாரிடம் டிபன் சாப்பிடுமே இந்த அணில்களில் ஒன்று கணவன்; மற்றது மனைவி. இவைகளும் நாரைக் கொண்டு கூடு கட்டியிருந்தன. அழகான கூடு. பந்து மாதிரி வட்டமான கூடு. அதில் இலைகளையும் பஞ்சு மாதிரி மிருதுவான பாசியையும் வைத்தன. படுத்தால் மெத்தென்று இருக்கவேண்டாமா, அதற்காகத்தான் பாசி.

பெண் அணில் இரண்டு குஞ்சுகளை ஈன்றது. சில அணில் மூன்று நான்கு குஞ்சுகள்கூட ஈனும். இது இரண்டுதான் ஈன்றது. உடனே அப்பா அணில் அம்மா அணில் இரண்டுக்கும் ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி. அப்பா அணில், 'கிச் - கிச் - கிச்!' என்று கத்தியது. அம்மா அணில் டான்ஸ் ஆடியது; துள்ளித் துள்ளி அங்கும் இங்கும் ஓடியது; வாலை வாலைத் தூக்கியது.

பிறக்கும்போது அணில் குஞ்சுக்குக் கண் தெரியாது; இமைகள் மூடியிருக்கும். உடம்பு மழமழ என்று இருக்கும்; ரோமமே இராது. இரண்டு வாரத்துக்குப் பிறகுதான் கண் திறக்கும்; ஒரு மாசத்துக்குப் பிறகுதான் ரோமம் முளைக்கும். குஞ்சு ஒன்றரை மாசத்தில், பூர்த்தியாக வளரும். அப்போது கண் நன்றாகத் தெரியும்; உடம்பு முழுதும் ரோமம் வளர்ந்து போர்த்துவிடும். குஞ்சு பெரிய அணிலாகிவிடும். அப்போதுகூட அம்மாவை விட்டுப்

ஒன்றரை மாதத்தில்

பிரியாது. வெகுநாள் வரைக்கும் அம்மாவே அதை வளர்க்கும். குஞ்சு அணிலுக்கு அம்மா அணில் பால் கொடுக்கும். குஞ்சு வளர வளர அம்மா தீனியெல்லாம் கொண்டு வந்து கொடுக்கும். தீனியைக் கன்னத்திலே இடுக்கிக் கொண்டு வரும்; குஞ்சுக்குக் கொடுக்கும்.

குஞ்சுகள் பிறந்த பிறகும் இந்த அம்மா, அப்பா இரண்டும் வெளியே போயின; இரை தேடின.

இப்படி ஒரு நாள் அம்மாவும் அப்பாவும் வெளியே போயிருந்தன. தோட்டத்துக்கு அந்தச் சமயத்தில் ஒரு குறும்புக்காரப் பையன் வந்தான். ஒரு குஞ்சைப் பிடித்துக்கொண்டு போய்விட்டான்.

மற்றக் குஞ்சு பயந்து நடுங்கியது. அம்மாவும் அப்பாவும் திரும்பி வந்தன.

“கிசுகிசுகிசுகிசுகிச்! அம்மா, அப்பா, ஒரு பொல்லாத மிருகம் வந்தது. அதற்கு வால் இல்லை. அது இரண்டு பின்னங் காலால் நடந்தது. இரண்டு முன்னங் காலால், தங்கச்சியைப் பிடித்துக்கொண்டு போய்விட்டது” என்றது அந்தக் குஞ்சு.

“கிச்-கிச்! கீச்-கீச்! ஐயோ! அது மனித மிருகம் ஆச்சே! தங்கச்சியை விடாதே!” என்று அலறியது அம்மா.

அப்பாவும் அழுதது.

“இனி இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் நமக்கும் அபாயம் வந்துவிடும். நாம் வேறு இடத்துக்குப் போவோம்” என்றது அப்பா.

அம்மா, அப்பா, குஞ்சு மூன்றும் வேறு ஒரு பெரிய தோட்டத்துக்குப் போயின.

அங்கே எத்தனையோ மரங்கள்- விதவிதமான மரங்கள் - இருந்தன. அவைகளின் நடுவில் ஒரு வாதாமரம் இருந்தது. அதில் இவை குடியேறின. கூடு கட்டிக் கொண்டன.

கொட்டை, விதை, மரப் பட்டை, பூமொட்டு, குருவி முட்டை இவைகளை எல்லாம் அணில் தின்னும். சில சமயம் சின்னக் குருவிக் குஞ்சுகளைக் கூடத் தின்றுவிடும். நன்றாய்க் கனிந்த பழத்தை அணில் கடித்துத் தின்னும். அணில் கடித்த பழம் ரொம்ப ருசியாக இருக்கிறதே, அதன் காரணம் இதுதான்.

ஒரு நாள் அப்பா அணிலும் அம்மா அணிலும் சில கொட்டைகளைப் பூமியில் புதைத்துக் கொண்டிருந்தன.

“இது என்ன விளையாட்டு, அம்மா?” என்று குஞ்சு அணில் கேட்டது.

“இது விளையாட்டு அல்ல. மழைக்காலம் வரப்போகிறது. அப்போது நமக்குத் தீனி வேண்டாமா? அதற்காகவே புதைத்து வைக்கிறோம். பல பிராணிகள் இந்த மாதிரி செய்யும். நம் அணில் இனத்திலும் இது வழக்கம்” என்றது அப்பா.

"நாம் புதைத்த இடத்தை மறந்து போனால் என்ன செய்வது?" என்றது குஞ்சு.

"போனதுதான். சில சமயம் மறந்துதான் போவோம். கொட்டைகள் முளைத்துவிட்டுப் போகின்றன. அது மற்றவருக்கு உபகாரந்தானே?" என்றது அம்மா.

பெரியவர்களைப் பார்த்து, குஞ்சும் அப்படியே செய்தது.

ஒரு சமயம் அம்மா தண்ணீரில் நீஞ்சியது. அதைப் பார்த்துக் குஞ்சும் நீஞ்சியது.

எல்லாம் சந்தோஷமாக இருந்தன. அதற்கு ஒரு நாள் தடை ஏற்பட்டது.

"கிசு கிசு கிசு கிசு கிசு கிசு கிசு கீச்! கீச்!"

அப்பா கத்தியது; தாவித்தாவி மரத்தின் உச்சிக்குப் போயிற்று.

அப்பாவுக்குப் பின்னால் ஒரு பயங்கர மிருகம் ஓடியது. அது ஒரு பூனை. அப்பாவை அது துரத்தியது.

'அப்பா அகப்பட்டுக்கொள்வாரோ' என்று பயந்தது குஞ்சு. அம்மாவும் பயந்தது. தலையை வெளியே நீட்ட இரண்டுக்கும் பயம். ஒடுங்கி ஒளித்துக் கிடந்தன.

முப்பது அடி உயரம் இருந்தது மர உச்சி; அந்த உச்சியிலிருந்து அப்பா ஒரே தாவாகத் தாவியது. தரையில் போய்க் குதித்தது. ஓடியே போய்விட்டது.

பூனையால் இவ்வளவு உயரத்திலிருந்து குதிக்க முடியாது. அது ஏமாந்தது. வாயைப் பிளந்தது. பேசாமல் திரும்பியது. மரத்தை விட்டு இறங்கியது. போய்விட்டது.

அப்புறந்தான் அப்பா திரும்பி வந்தது.

"அப்பா, அப்படிக் குதித்தீர்களே; காயம் படவில்லையா? எப்படித் தப்பித்துக்கொண்டீர்கள்?" என்று கேட்டது குஞ்சு.

"நமக்குத்தான் ஆகாய விமானம் இருக்கிறதே! அதனால் தப்பித்துக்கொண்டேன்" என்றது அப்பா.

"ஆகாய விமானமா? அது ஏது?" என்றது குஞ்சு.

"நமது வால்தான் நமது ஆகாய விமானம். அது புஸு புஸு என்று மயிரடர்ந்து இருக்கிறது. ஆகாயத்தில் அது பலூன் மாதிரி பரவிவிடும். அதில் மிதந்தபடி நாம் தரைக்குப் போவோம். ஆனால் எல்லா அணிலும் இப்படிச் செய்ய முடியாது. சில அணில்களால்தான் முடியும். நம் மாதிரி அணில்களைப் பறக்கும் அணில்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் நமக்குச் சிறகு இல்லை. சின்னக்கொடி, கிளைகளில் ஓடுகிறோமே, அப்போது நமது வால் பாலன்ஸ் செய்கிறது. அதனால்தான் நாம் விழாமல் செல்லுகிறோம்; நாம் படுக்கும்போது வால் நமது மெத்தையாக உதவுகிறது. வாலிழந்த மனிதனுக்கு இந்தச் சௌகரியம் எல்லாம் இல்லை" என்றது அப்பா.

"இனி இந்த இடமும் அபாயந்தான்" என்றது அம்மா.

மூன்றும் வேறோர் இடத்துக்குப் புறப்பட்டன. எங்கே போயினவோ; யாருக்குத் தெரியும்? ஆனால், அணில்களுக்குப் பதினைந்து முதல் இருபது வருஷம் வரை ஆயுசு. இவை கெட்டிக்கார அணில்கள்; தீர்க்காயுள் வாழும்.

பவழவல்லி

கி. ரா.

3

மச்சப் பெண்

சுந்தரம் ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில் எங்கிருந்தோ ஒரு பெண் திடீரென்று வந்து தோன்றினாள். அவளுடைய உடல் இடைக்குக் கீழ் மீன் உருவாய் இருந்தது.

முதலில் அவளை அவன் நன்றாகக் கவனிக்கவில்லை. அவனை ஒரு பயங்கர ஆயிரக்கால் ஜந்து விரட்டிக்கொண்டு வந்ததல்லவா? அவன் ஓட முடியாமல் கீழே விழப்போகும் சமயம். அப்போதுதான் அந்த மச்சப் பெண் வந்தாள். கையைத் தூக்கி, “போ!” என்று அதட்டினாள். உடனே அந்த ஜந்து தன்னுடைய ஆயிரம் கைகளையும் மடக்கிக்கொண்டு உறுமிக்கொண்டே திரும்பி ஓடிவிட்டது. அப்போதுதான் அவளை நன்றாகக் கவனித்தான்.



அவளுடைய தலையில் முத்தும் பவழமும் கோத்த அலங்காரமான கிரீடம் வைத்திருந்தாள். அவள் உடலில் நுண்ணிய வெள்ளி நூலால் நெய்த ஆடையை அணிந்திருந்தாள். சிறு சிறு சங்குமணிகளால் செய்த ஆபரணங்கள் நிறைய அணிந்திருந்தாள். கையில் குவிந்த தாமரைப் பூவைக் கொடியுடன் வைத்திருந்தாள்.

அவள் ஒருகால் மந்திரவாதியாக இருப்பாளோ? அவனைக் கல்லாகச் சபித்துவிடுவாளோ?

திடீரென்று அவன் கனவு கலைந்தது.

கண்ணை விழித்துப் பார்த்ததும் எல்லாம் கனவு என்று தோன்றியது. ஆனால் அந்த விஷ ஜந்து எங்கே? அதைக் காணவில்லையே!

அவன் ஒன்றும் புரியாமல் திகைக்கும்போது ஒரு ரத்தினக் குவியலுக்குப் பின்புறமிருந்து ஒரு தலை தெரிந்தது. அவளேதான். அவன் கனவில் கண்ட அதே மச்சப் பெண்தான்!

அப்போது அவன் கண்டது கனவு இல்லை; நிஜம்தான்! உடனே அவளிடம் போய் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று நினைத்து எழுந்து, ரத்தினமயமான அந்தக் குன்றின் பக்கம் போனான். அங்கே அந்தப் பெண் மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றாள்.

"பெண்ணே! என் உயிரைக் காப்பாற்றியதற்காக நான் நன்றி செலுத்துகிறேன்" என்று அவளைப் பார்த்துச் சொன்னான்.

அவள் உடனே ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"நான் சொல்கிறது புரிகிறதா?"

அவள் மெதுவாக, "புரிகிறது; ஆனால் எதற்காக நன்றி என்றுதான் தெரியவில்லை" என்றாள்.

அவள் வாயைத் திறந்து பேசியதும் சுந்தரத்துக்கு அவ

ளுடைய வாயையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. அவ்வளவு முத்து முத்தாக, பால் போல் வெண்மையாக இருந்தன அவளுடைய பற்கள்.

"அந்தக் கொடிய மிருகத்தினிடமிருந்து என்னை நீ காப்பாற்றினுயே, அதற்காகத்தான் நன்றி" என்ருன் சுந்தரம்.

அதைக் கேட்டதும் அவள் கலீரென்று நகைத்தாள்.

"எதற்காகச் சிரிக்கிருய்?"

"உங்களை விரட்டிக் கொண்டு வந்ததே, அது ஒரு கொடிய மிருகமல்ல. மிகவும் சாதுவான பிராணி. எங்கள் உலகத்தில் சர்வசாதாரணமாய் இருக்கும். அதைக் கண்டு பயந்துகொண்டு நீங்கள் அலறியதும் நான் யதேச்சையாக இங்கு வந்தேன். என்னைக் கண்டதும் அது ஓடிவிட்டது. அதை நினைத்துத்தான் சிரித்தேன்" என்ருள் அவள்.

ஒரு பெண்பிள்ளைக்கு முன்ஞல் அவமானப்பட நேர்ந்ததே என்று சுந்தரத்துக்கு வெட்கமாகப் போய்விட்டது. அந்த உலகத்தைப் பற்றியும், அன்று அவன் கண்ட அதிசயங்களைப் பற்றியும் எத்தனையோ கேள்விகள் கேட்க வேண்டுமென்று நினைத்தான். ஆனுல் அதற்குள் அவளாகவே பேசத் தொடங்கினுள்.

"ஆமாம், இந்த உலகத்துக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

அவன், "அது எனக்கே தெரியாது. எப்படியோ வந்துவிட்டேன். திரும்பிப் போக வழி தெரியவில்லை" என்ருன்.

"ஏன், எங்கள் உலகம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஒரு நாளைக்குள் அலுத்துப் போய்விட்டதா?"

"பிடிக்காமல் ஒன்றும் இல்லை. ஆனுல் ஒன்றும் புரியவேயில்லை. இது என்ன உலகம்?"

"இதற்குப் பவழ லோகம் என்று பெயர். இங்கே வந்தவர்கள் யாரும் திரும்பிப் போக விரும்பவே மாட்டார்கள். உங்களுக்குத்தான் பிடிக்கவில்லை."

சுந்தரம் அவளை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு சற்றுத் தயக்கத்துடனேயே, "நீ என்ன மனுஷியா, அல்லது மீஞ?" என்று கேட்டான்.

அவள் உடனே சிரித்து, "இது எங்கள் பிறவி. நாங்கள் எல்லாருமே இப்படித்தான் இருப்போம்" என்ருள்.

"ஆண்பிள்ளைகள்?"

"ஆண்பிள்ளைகள் உங்களைப் போல்தான் இருப்பார்கள். பெண்கள்தான் இடைக்குக் கீழே மீஞக இருப்பார்கள். அதுதான் எங்கள் ஜாதியில் அழகு. சில சமயம் சில பெண்கள் பிறக்கும்போதே மனிதரைப்போல் கால்களுடன் பிறப்பார்கள். அந்தப் பெண்களை நாங்கள் ஜாதியிலேயே சேர்க்க மாட்டோம். அவர்களால் எங்கள் உலகத்துக்கே கெடுதல் வரும் என்று பூலோகத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவோம்."

அவனுக்கு எல்லாம் அதிசயமாய் இருந்தது. அவள்

சொன்ன விஷயங்களைப்பற்றி அவன் யோசித்தான்.

அப்போது அவள் திடீரென்று நினைத்துக்கொண்டதைப்போல், "பார்த்தீர்களா? நீங்கள் வந்து எவ்வளவு நேரமாயிற்று? உங்களுக்கு எவ்வளவு பசியாயிருக்கும்? இதோ போய் ஆகாரம் கொண்டு வருகிறேன். நொடியில் வந்து விடுவேன். நீங்கள் இந்த இடத்திலேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டுத் திரும்பித் தாவி ஓடினாள்.

அவள் எப்படி நடப்பாள் என்று பார்க்க ஆசை, சுந்தரத்துக்கு. இரண்டு கால் இருந்தால் தானே நடக்க முடியும்?

ஆனால் அவள் நடக்கவில்லை. முன்னடி சாய்ந்து தரையில் உடல் பாவாமல், காற்றில் மிதப்பதைப்போல் நீந்திக் கொண்டு போனாள். அப்படிப் போவதே ஒய்யாரமாய் இருந்தது. மனிதப் பெண்களும் ஏன் அப்படிப் போகக்கூடாது என்று சுந்தரம் நினைத்தான். போகும்போதே ஒயிலாகத் திரும்பி அவனைப் பார்த்து ஒரு புன்சிரிப்புச் சிரித்துவிட்டுப் போனாள். சுந்தரம் சொக்கிப் போய் நின்றான்.

அந்தப் பெண்ணின் அதிசய அழகைப்பற்றி அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது, "யாரடா அங்கே?" என்று ஒரு முரட்டுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

அவனுக்கு எதிரில் குள்ளமான இரண்டு முரடர்கள் நின்றனர். அவர்கள் 'செவச் செவ' என்று கண்களை உருட்டி விழிப்பதைப் பார்த்தாலே பயமாயிருந்தது.

அவர்கள் இடையில் பாசி மணிகளைக் கோத்து ஆடையாக அணிந்திருந்தார்கள். தலையில் கோரைகளால் பின்னிய குல்லாய் தரித்திருந்தார்கள். ஒருவன் கையில் ஒரு மணிக் கயிறு வைத்திருந்தான். இன்னொருவன் விசித்திரமான ஒரு கத்தியை வைத்திருந்தான். அந்தக் கத்தி மிக நீளமான ஒரு கிளிஞ்சிலைக் கொண்டு செதுக்கியதுபோல் தோன்றியது.

அவர்களைக் கண்ட சுந்தரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். அவனுக்கு ஓடக் கூடத் தைரியம் இல்லை.

அதற்குள் கையில் கயிறு வைத்துக்கொண்டிருந்தவன் சடாரென்று சுந்தரத்தின் கைகளில் கயிற்றைப் போட்டுக் கட்டி இழுத்தான். "வா அப்பா! யாரைக் கேட்டுக் கொண்டு இங்கே நுழைந்தாய்?" என்று சொல்லிச் சிரித்தான்.

பயத்துடன் சுந்தரம், "என்னை எங்கே அப்பா அழைத்துக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"போ தெரியும்!" என்று இன்னொரு முரடன் அவன் கழுத்தில் 'கல்தா' கொடுத்துத் தள்ளினான்.

அந்தப் பெண் யார், அந்த முரடர்கள் யார் என்று ஒன்றும் புரியாமல் சுந்தரம் தன் தலைவிதியை நினைத்துக் கொண்டு அவர்கள் பின்னால் போனான். (தொடரும்)

ராஜேன் பாபு

கி. வா. ஜகந்நாதன்

'தூங்குமூஞ்சி' என்று யாராவது உங்களைச் சொன்னால் உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? சுறுசுறுப்பாக இருந்தால் தான் படிப்பு வரும்; வேலைகளை நன்றாகச் செய்யலாம். "ஒருவர் தூங்குமூஞ்சியாக இருந்தார்; ஆனால் அவர் படிப்பிலே புலி" என்று சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். "அது எப்படி? தூங்குமூஞ்சிக்கும் படிப்புக்கும் வெகு தூரம்" என்று தான் சொல்லுவீர்கள். உண்மையில் அப்படி ஒருவர் இருக்கிறார். நம்முடைய பாரத தேசமாகிய குடியரசுக்கு இப்போது தலைவராக இருப்பவர் ராஜேந்திர பிரசாத்

காலேஜ் மாணவர்

என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. இதே ராஜேன்பாபு சின்ன வயசில் தூக்கத்திலே அதிகப் பிரியம் உள்ளவராக இருந்தாராம்; ஆனால் படிப் பிலே எல்லோரையும்விடக் கெட்டிக்காரர். அவர் எம், ஏ., எம். எல்., என்ற பட்டங்க ளெல்லாம் வாங்கியிருக்கிறார். 'அவர் தூங்கு மூஞ்சியாகவே இருந்து எப்படிக் கெட்டிக் காரர் ஆனார்?' என்று தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆசை யாக இருக்கிற தல்லவா? இதோ சொல்லுகிறேன்.

ராஜேன் பாபு சின்னக் குழந்தையாக இருக்கிறபோது எப்போது வீட்டில் விளக்கு ஏற்றுகிறார்கள் என்பதே அவ ருக்குத் தெரியாது. அதற்குள் தூங்கிப் போய்விடுவார். அவ ருடைய தகப்பனார் பெரிய ஜமீன்தார். ராஜேன் பாபுவுக்கு இரண்டு அண்ணன்மார்; இரண்டு தமக்கைகள். இவரே கடைக்குட்டி. சூரியன் மலை வாயில் விழவேண்டியதுதான்; ராஜேன் பாபுவின் கண் இமை கள் மூடிக்கொள்ளும். அதற் கப்புறம் ராத்திரி என்ன நடந் தாலும் அவருக்குத் தெரியாது.

அவர்கள் வீட்டில் ஒரு வேலைக்கார அம்மாள் இருந் தாள். வேலைக்காரி ஆனாலும் சொந்தக்காரியைப் போலவே குடும்பத்தில் இருந்து வந்தாள். அவளை எல்லோரும் 'சித்தி' என்று அழைப்பார்கள். அந் தச் சித்தி, குழந்தை ராஜேன் பாபுவிடம் மிகவும் பிரியமாக இருப்பாள். அவர் தூங்கிப் போனாலும் எழுப்பிச் சாதம் போடுவாள். பாதித் தூக்கத் தோடே அவர் அவள் ஊட் டும் சாதத்தை ருசியே தெரியா மல் மடக்கு மடக்கென்று விழுங்குவார். நடு நடுவிலே தூங்கி விழுவார். சித்தி, "இந்தா, அம்மாவுக்கு ஒருபிடி; அப்பாவுக்கு ஒரு பிடி; அண்ணு வுக்கு ஒரு பிடி" என்று சொல்லிச் சொல்லி ஊட்டு வாள். "என் கண்ணே இல்லையோ! காகா ஓஷ்! இதோ மைனு பார்; மைனு வுக்கு ஒரு பிடி; குயிலுக்கு ஒரு பிடி" என்று கொஞ்சிக் கொண்டே ஊட்டுவாள். காலையிலே எழுந்திருந்தால், 'சித்தி மைனுவையும் குயிலையும் ராத்திரிக் கூப்பிட் டாள் போலிருக்கிறதே' என்று தோன்றும்.

அஸ்தமித்தவுடனே தூங்கி விடும் பழக்கம் ராஜேன் பாபுவை விடவே இல்லை. அவர் மேல்படிப்புப் படிக்கிற போதுகூட ஏழரை மணிக்கே தூங்கிவிடுவார். இந்த வேடிக் கையைக் கேளுங்கள். அவ ருக்கு முப்பது வயசு நடந்து கொண்டிருந்தது. சட்டக் காலேஜில் அவர் புரொபஸர் வேலை பார்த்து வந்தார். அதோடு வக்கீலாகவும் உத்தி யோகம் பார்த்தார். காலை நேரத்தில் வழக்குக் கட்டு களைப் படிப்பார். கோர்ட்டுக்

குப் போவார். மத்தியான்னத்துக்குமேல் சட்டக் காலேஜுக்குப் போய்ப் பாடம் சொல்லுவார். சட்டப் பரீட்சையில் உயர்ந்தது எம். எல். பரீட்சை. அதிலும் தேறிப் பட்டம் பெற வேண்டுமென்று ராஜேன் பாபு எண்ணினார். இத்தனை வேலைகளையும் வைத்துக்கொண்டு எப்படிப் படிக்கிறது?

சாயங்காலம் பரீட்சைப் பாடத்தைப் படிக்க ஆரம்பிப்பார். ஏழு மணிக்கே தூக்கம் கண்ணைச் சுற்றும். ஏழரை மணிக்குத் தூங்கிவிடுகிறவர் அல்லவா? ஒன்பது மணி வரையில் படித்தே தீர்வது என்று உறுதி செய்துகொண்டார். ஒரு நாள் படிக்க உட்கார்ந்தார். தூக்கம் வரும் போல இருந்தது. "சீ, சனியனே!" என்று சொல்லி நின்றபடியே படித்தார். அப்போதும் தூக்கம் கண் இமைகளை இழுத்தது. நடந்து கொண்டே படித்தால் தூக்கம் வராது என்று நினைத்தார். மெதுவாக உலாத்தின படியே படித்துக்கொண்டிருந்தார். தூக்கம் அவரை அணுகியது. கண் சுழன்றது. புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது; அதுகூட அவருக்குத் தெரியவில்லை. அடுத்தபடி அவரே தடாலென்று கீழே விழுந்து விட்டார். தலையில் காயம் பட்டுவிட்டது. அது முதல் எப்போது தூக்கம் வருகிறதோ அப்பொழுது படிப்பதை நிறுத்திவிடுவார். நல்ல புத்திசாலி ஆகையால் கொஞ்ச நேரம் படித்தாலும் அது ஆழமாக அவர் மனத்தில் பதிந்தது. அவர் பரீட்சையில் தேறிவிட்டார்.

சின்னக் குழந்தையாக இருந்தபோது ராஜேன்பாபுவுக்கு வீட்டிலேயே ஒருவர் பாடம் சொல்லிக்கொடுத்தார். அவர் ஒரு மௌல்வி; முஸ்லிம் வாத்தியார். "எனக்கு அது தெரியும்; இது தெரியும்" என்று அவர் சொல்லிக் கொள்வார். ராஜேன் பாபுவுடைய சிற்றப்பா அந்த மௌல்வி இப்படியெல்லாம் சொல்வதைப் பார்த்து அவரைக் கிண்டல் பண்ணுவார்.

ஒரு நாள் சிற்றப்பா மௌல்வியை, "உங்களுக்குத் துப்பாக்கி சுடத் தெரியுமோ?" என்று கேட்டார். "துப்பாக்கியா! பீரங்கி கூடச் சுடத்தெரியும்" என்றார் மௌல்வி. "சரி, இன்றைக்கு நாம் வேட்டையாடப் போகலாம் வாருங்கள்" என்று சிற்றப்பா அவரை வெளியில் அழைத்துச் சென்றார். ராஜேன் பாபுவும் அவர்களுடன் வேடிக்கை பார்க்கப் போனார். ஓரிடத்தில் ஒரு மரத்தில் ஒரு கழுகு உட்கார்ந்து கொண்டிருந்தது. சிற்றப்பா, "அதோ அந்தக் கழுகைக் குறி பார்த்துச் சுடுங்கள்" என்று சொல்லித் தம்முடைய துப்பாக்கியை மௌல்வியின் கை

யில் கொடுத்தார். மௌல்வி அதை வாங்கிக்கொண்டார். கனைத்தார். குறி பார்த்தார். துப்பாக்கியில் உள்ள குதிரையை அமுத்தினர்; அவ்வளவுதான். டுமீல் என்ற துப்பாக்கி வெடியோடு தடாலென்ற ஓசை கேட்டது. கழுகு விழவில்லை. மௌல்வியே பின் பக்கமாக விழுந்துவிட்டார். கழுகு பறந்தோடிப் போயிற்று. துப்பாக்கி ரவை வெடித்ததனல் பயந்துபோய் மௌல்வி கீழே விழுந்துவிட்டார். இதைப் பார்த்து ராஜேன்பாபுவும் சிற்றப்பாவும் இடிஇடியென்று சிரித்தார்கள்.

ராஜேன்பாபுவினிடம் அம்மாவுக்கு அதிகப் பிரியம். பஜனைப் பாட்டுக்களும் ராமாயணம் முதலிய கதைகளும் அம்மா சொல்வாள். அவற்றைக் கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொள்வார்.

ராஜேன் பாபு பிகார் மாகாணக்காரர். அவர் கல்கத்தாவில் காலேஜ் படிப்புப் படித்தார். வங்காளிகள் படிப்பில் கெட்டிக்காரர்களென்றும், பிகாரிகளுக்கு அவ்வளவு புத்திக் கூர்மை இல்லையென்றும் காலேஜில் பேசிக்கொள்வார்கள். ராஜேன் பாபு முதல் முதலில் காலேஜில் வந்து சேரும்போது அங்கே ஆசிரியராக இருந்த ரசிகபாபு என்பவரைப் பார்த்தார். அந்த ஆசிரியர், "என்ன பையா, நீ பிகாரி. வங்காளிப் பையன்களுக்குச் சமானமாகப்படிக்க முடியுமா? படித்துப் பேர் வாங்க வேண்டும்" என்று சொன்னர். ராஜேன்பாபுவுடைய மனத்தில் அவர் சொன்னது நன்றாகப் பதிந்துவிட்டது. காலேஜில் நடந்த எல்லாப் பரீட்சைகளிலும் அவரே முதல் மார்க்கு வாங்கினர். அதனல் அவருக்குப் பல பரிசுகளும் ஸ்காலர்ஷிப்புகளும் கிடைத்தன.

எப். ஏ. வகுப்பில் ராஜேன் பாபு படித்துக்கொண்டிருந்தார். ஒரு வெள்ளைக்காரர் புதிய பிரின்ஸிபாலாக வந்தார். எப். ஏ. பரீட்சைக்கு மாணுக்கர்களை அனுப்புவதற்குமுன் 'ஸெலெக்ஷன்' பரீட்சை நடந்தது. ஒரு நாள் புதிய பிரின்ஸிபால், "இன்னர் இன்னர் பரீட்சைக்குப் போகலாம்" என்று தெரிவிக்க வந்தார். பையன்கள் ஆவலோடு அவர் படிக்கும் பேர்களைக் கேட்டார்கள். 'ஸெலக்ஷன்' ஆனவர்களின் பெயர்களை ஒவ்வொன்ருகப் படித்தார் பிரின்ஸிபால். ராஜேன் பாபு கடைசி வரையில் கவனித்தார். அவர் பெயர் வரவில்லை. ராஜேன் பாபு ஸெலக்ஷன் பரீட்சையில் நன்ருக எழுதியிருந்தார். அவர் பெயர் வராமல்இருப்பதாவது? அவர் எழுந்து நின்ருர். "ஸார், என் பெயரை வாசிக்கவில்லையே!" என்ருர். பிரின்ஸிபால்

ஏளனச் சிரிப்போடு, 'ஸெலெக்ஷனில் தேறினவர்கள் பெயர்களே இதில் இருக்கும்' என்றார். ராஜேன் பாபுவுக்கு ரோசம் தாங்கவில்லை. மற்றப் பையன்கள்கூட ஆச்சரியப்பட்டார்கள்.

"என் பெயர் இருக்கத்தான் வேண்டும்" என்று தைரியமாகச் சொன்னார் ராஜேந்திரர்.

பிரின்ஸிபால் கோபத்துடன், "நீ அடக்கமில்லாதவனாக இருக்கிறாய்" என்றார்.

"இல்லை; நான் நன்றாகப் பரீட்சை எழுதியிருக்கிறேன். என் பெயர் இல்லாமல் எப்படி இருக்கும்?"

"சண்டியாக இருக்கிறாயே; நீ வாயாடுவதனால் உனக்கு ஐந்து ரூபாய் அபராதம்!" என்றார் பிரின்ஸிபால்.

மாணாக்கர் விடவில்லை; "இல்லை; நன்றாகப் பாருங்கள். என் பெயர் இல்லாமல் போக நியாயம் இல்லை" என்று அழுத்தமாகச் சொன்னார்.

"என்னை எதிர்த்துப் பேசுகிறாய்; உனக்குப் பத்து ரூபாய் அபராதம்."

"ஸார், ஸார். நன்றாகப் பாருங்கள். நான் நிச்சயமாகச் செலக்ஷனில் தேறியிருப்பேன்."

பிரின்ஸிபால் பின்னும் கோபம் அடைந்தார். "பதினைந்து ரூபாய்", "இருபது ரூபாய்", "இருபத்தைந்து ரூபாய்" என்று அபராதத்தை ஏற்றிக்கொண்டே போனார். ராஜேந்திரரோ விட்டபாடில்லை. இந்தச் சங்கடமான சமயத்தில், பிரின்ஸிபாலுடன் வந்திருந்த குமாஸ்தா, ராஜேந்திரருக்குக் கண்ணைக் காட்டினார். அப்போதுதான் அவர் பேசாமல் இருந்தார். பிரின்ஸிபால் கோபத்தோடு போனார்.

ராஜேந்திரர் பரீட்சைக்குப் போகாமல் நின்றுபோகவில்லை. பரீட்சை எழுதினார். பிரின்ஸிபால் அவரையும் பரீட்சைக்கு அனுப்பினார். அவர் அபராதமும் செலுத்தவில்லை. உண்மை என்னவென்றால் அவர் பெயரைச் சேர்க்க மறந்துபோய் விட்டார்கள். அதைக் குமாஸ்தா கண்டுபிடித்துச் சரி செய்து விட்டார். பரீட்சையில் ராஜேன் பாபு முதல் மார்க்கு வாங்கினார்.

படிப்பிலே சூரப்புலி ராஜேந்திரர். சரித்திரத்தில் மாகாணத்திலே முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். ஆங்கிலம், தத்துவசாஸ்திரம் இரண்டிலும் நிறைய மார்க்குகள் வாங்கினார்.

இவ்வளவு படித்தாலும் அடக்கமான சுபாவம் உடையவர் ராஜேன்பாபு. ஆஹா ஊஹூ என்று படாடோபம் செய்யமாட்டார். "நிறைகுடம் தளும்பாது" என்று சொன்னால் நம்முடைய இந்தியக் குடியரசின் முதல் தலைவராகிய ராஜேன்பாபுவைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

சென்னையைச் சுற்றி உள்ள ஊர்கள்

சென்னையைச் சுற்றி உள்ள ஊர்கள்



அப்பாவும் அம்மாவும் இல்லாத சமயம் வந்தான். சாவியைக் கொண்டுவந்து சிறைக் கதவைத் திறந்தான்.

சரயு ஆனந்தத்துடன் வெளியில் வந்தது. அவன் கையில் அந்தத் தங்க விமானத்தைக் கொடுத்துவிட்டு, பட பட வென்று ஐந்தாறு குட்டிக் கரணம் போட்டு மண் தரையில் புரண்டது. அடுத்த கணமே சரயு கந்தர்வ புருஷனுடைய உருவடைந்தது. அவினாசனுக்குக் குடல் நடுங்கிற்று. ஆனால் அந்தக் கந்தர்வ புருஷன், "கொஞ்சங்கூடப் பயப்படாதே! என்னைக் காப்பாற்றிய உன்னை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். எப்பொழுது உனக்கு ஆபத்தாக இருக்கிறதோ அப்பொழுது என்னை நினைத்தால் வருகிறேன்" என்றான்.

அவினாசன் சிறிது தைரியத்துடன், "நான் நினைப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

அந்தக் கந்தர்வன், "அதைச் சொல்ல மறந்து விட்டேனே. இதோ இந்தத் தேசத்தின் கோடியில் ஒரு பெரிய காடு இருக்கிறது, தெரியுமா? அங்கே நீ வரவேண்டும். அதற்குப் பிறகு உனக்குப் பாதையே தெரியாது. நீ பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு விடு. கால் போனபடி நடந்துபோ. கடைசியாக உனக்குக் கால் வலிக்கும்போது கண்ணைத் திறந்து பார். அங்கே ஒரு பெரிய சோலையும் ஏரியும் இருக்கும். அந்த ஏரி ஜலத்தை ஒரு

வாய் குடித்தாயானால் நீ என்ன நினைத்தாலும் எனக்கு உடனே தெரிந்துவிடும். எந்தச் சமயத்திலும் இந்த விமானம் உன் கையில் இருக்கட்டும். அதனால் உனக்கு நன்மையே உண்டாகும்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவினாசன் அந்தத் தங்கவிமானத்தைப் பொருத்தி விளையாடிக்கொண்டிருந்தபோது அவனுடைய அப்பா வந்துவிட்டார். எதிரே சிறைக் கதவு திறந்து கிடப்பதையும் அவன் தங்க விமானத்துடன் விளையாடுவதையும் கண்டதும், நடந்த விஷயம் அவருக்குத் தெரிந்துவிட்டது. "அடே, உனக்கு எவ்வளவு துணிச்சல்! என் சாவியை எடுத்து அந்தப் பக்ஷியை வெளியே விட்ட நீயா ஒரு பிள்ளை? இப்படிப்பட்ட பிள்ளை எனக்கு வேண்டியதேயில்லை.

இதோ, உன் தலையைச் சீவி விடுகிறேன், பார்" என்று கோபாவேசமாகப் பாய்ந்தார்.

அவிநாசனுடைய அம்மா நடுவில் வந்து தடுத்து, "வேண்டாம், வேண்டாம்! நமக்கு ஒரே பிள்ளை. அவன் எங்கேயாவது உயிரோடு இருந்தால் போதும். அவன் செய்த காரியத்துக்காக அவனை வேண்டுமானால் இதைவிட்டு விரட்டிவிடுங்கள்!" என்று கெஞ்சினாள்.

அவனுடைய அப்பாவுக்கு அது நல்ல யோசனையாகப் பட்டது. டப்டப்பென்று கையைத் தட்டினார். உடனே கரிய கறுப்பன் என்ற அடிமை வேலையாள் அவர் முன்வந்து தலைவணங்கி நின்றான்.

"டேய், கரிய கறுப்பா! ஓடிப்போய் மூன்று பையில் பணமும் ஒரு கோச்சுவண்டியும் தயார் செய்! இந்த அவிநாசனை அந்த வண்டியில் ஏற்றி எங்கேயாவது ஓட்டிக்கொண்டு போ! அந்தப் பக்ஷி இல்லாமல் இந்தப் பயல் இந்தப் பக்கம் தலைகாட்டக் கூடாது. காட்டினால் தலை போய்விடும்" என்று உத்தரவிட்டார்.

கரிய கறுப்பன் வண்டியை ஓட்ட அவிநாசன் பிரயாணம் செய்தான். எங்கே சாப்பாடு கிடைக்குமோ, அங்கே சாப்பிடுவார்கள். எங்கே நிழல் இருக்குமோ, அங்கே சிறிது தங்கிக் களைப்பாறுவார்கள். இப்படியாகப் பல வருஷங்கள் பிரயாணம் செய்துகொண்டே போனார்கள்.

கரிய கறுப்பன் இந்தத் தொலையாப் பிரயாணத்தினால் அலுப்புற்றான். 'இந்தப் பொடிப் பையனால் எவ்வளவு தொல்லைகள்? இவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு அந்த மூன்று பைப் பணத்துடன் கம்பி நீட்டுவது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவிநாசன் கையிலிருந்த தங்க விமானம் இந்தச் சமயத்தில் பிரகாசமாகத் தெரிந்தது. அவிநாசன் அதை உடனே உற்றுக் கவனித்தான். கரிய கறுப்பன் மனதில் இருந்த எண்ணங்கள் யாவும் அப்படியே கண்ணாடிப் பிம்பம் போல அவன் கண்ணுக்குத் தெரிந்தன. தெரிந்துகொண்டு மட்டும் என்ன பிரயோசனம்? கரிய கறுப்பனை அவனால் என்ன செய்ய முடியும்?

"கரிய கறுப்பா! நான் என்ன செய்யலாம் என்று நினைக்கிறேன், தெரியுமா?" என்று கேட்டான் அவிநாசன்.

கரிய கறுப்பன் மனசுக்குள் ஆத்திரம் கொண்டவனாய், "எனக்கு எப்படித் தெரியும் நீ நினைப்பது? சொன்னால் தானே தெரியும்?" என்றான்.

"என்னிடம் இருக்கும் பணத்தையெல்லாம் உனக்கே கொடுத்துவிடப் போகிறேன். எனக்கு எதற்குப் பணம்?"

கரிய கறுப்பனுக்கு இந்தப் பேச்சு சந்தோஷமுண்டாக்கியது. அவன் திருப்தியடைந்தான். மேலும் ஒரு வருஷமாயிற்று. அவிநாசன் வாலிபப் பருவத்தை எட்டிக்கொண்டிருந்தான். அப்போதும் ஒரு தடவை முன் சொன்னது போலவே கரிய கறுப்பனுக்குத் தோன்றியது.

அவிநாசன் பார்த்தான்; தங்க விமானத்தின் நன்மையை உணர்ந்தான். "அடே, இதோ பாரடா! இனி இன்று முதல் நீ எஜமான். நான் உனக்குச் சாரதி! இப்படி இருந்தால் என்ன?" என்று கேட்டான் முன்யோசனையாக.

கரிய கறுப்பனுடைய திருப்திக்குக் கேட்பானேன்? எப்படியாவது உயிருடன் இருந்தால் போதும் என்ற எண்ணத்தில் வண்டியை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தான்.

கடைசியாக வேறொரு தேசத்தை அடைந்தார்கள். அந்தத் தேசத்து அரசனுக்கு அவிநாசனிடம் அலாதி அன்பு ஏற்பட்டுவிட்டது. அவனுக்கு ஆண் சந்ததி இல்லை. ஒரே ஒரு பெண்தான். அவளையும் துஷ்ட ஜடாமுனி தூக்கிக்கொண்டு போய்விடும் என்பதற்காகத் தாமரங் கோட்டையில் பத்திரமாய் வைத்திருந்தான். பலத்த கட்டுக் காவல். அவிநாசனை அபிமான புத்திரன்போலக் கருதி சகல வசதிகளும் அவனுக்குச் செய்து கொடுத்தான். கரிய கறுப்பனுடைய தலைவிதி, பழையபடி குதிரை லாயத்தில் காசாரி ஆனதுதான்!

ஒரு சமயம் அரசன் குதிரை லாயத்தைப் பார்வையிட வந்த போது கரிய கறுப்பன் மிக மரியாதையாகத் தலைவணங்கி, "மகாராஜா! அவிநாசன் என்னிடம் என்ன பெருமையடித்துக்கொண்டான், தெரியுமா? அந்த ஜடாமுனியை அவன் பிடித்து வந்து கொன்றுவிட முடியுமாம்!" என்று பொய் சொன்னான்.

"என்ன அது? அவிநாசனா அப்படிக் கூறினான்?"

"ஆமாம், மகாராஜா! உங்கள் குமாரியைத் திருடிச் சிறைப்பிடிக்க இருக்கும் அதே ஜடாமுனியைத்தான் சொல்கிறான்!"

"அப்படியா? ஆச்சரியமாய் இருக்கிறதே! பெரிய பெரிய வீராதி வீரர்களும் சூராதி சூரர்களும் முயன்று முடியாமல் தொலைந்து போனார்களே!" என்றான் அரசன்.

"அதென்னவோ அவிநாசன் தன்னால் முடியும் என்கிறான்" என்றான் கரிய கறுப்பன்.

அரசன் அவிநாசனை அழைத்து, கரிய கறுப்பனிடம் கூறியதாகச் சொன்ன விஷயம் உண்மைதானா என்று கேட்டான். அவிநாசன், பாவம்,

என்ன செய்வான்? "ஐயையோ! இதென்ன அபாண்டம்! நான் எதுவுமே, யாரிடமும் சொல்லவில்லையே!" என்முன். அரசன் நம்பினல் தானே!

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ எப்படியாவது போய் அந்த ஜடாமுனியைக் கொண்டுவர வேண்டும்! அதுவரையில் உன் தங்க விமானம் என்னிடம் இருக்கட்டும்" என்முன் அரசன்.

அவிநாசன், 'எப்படி இதைச் செய்வேன்! சரிதான்; இதோடு தொலைந்தேன்' என்று எண்ணிக்கொண்டு கால் போன படி சென்முன். கடைசியாக ஒரு காடு வந்தது. இந்தச் சமயத்தில் அவனுக்குப் பழைய ஞாபகங்கள் திடீரென்று வந்தன. ஆனல் இது கந்தர்வன் சொன்ன காடுதானே அல்லது வேறு கடோ? எப்படி வேண்டுமானலும் இருக்கட்டும் என்று அவன் கண்ணை மூடிக் கொண்டு நடந்தான். கால்கள் வலித்தன. கண்ணைத் திறந் தான். என்ன ஆச்சரியம்! அங்கே முன்பு கந்தர்வன் வர்ணித்தபடி எரியும் சோலை யும் இருந்தன. அவிநாசன் எரி ஜலத்தை ஒரு வாய் குடித்ததும் எங்கிருந்தோ சரயு என்ற பக்ஷி அவன் முன் தோன்றி யது. மண் தரையில் ஐந்தாறு தடவை கரணம் போட்டு, கந்தர்வனுடைய உருவத்தை அடைந்தது.

"அடே அவிநாசா! நீ எவ்வளவு அழகாக வளர்ந்து விட்டாய்! நீ வந்த காரியம எனக்குத் தெரியும். கவலைப் படாதே! தங்க விமானம் உன் னிடமே இருந்திருந்தால் இந் தத் தொல்லையே வந்திருக்காது. சரி; புறப்படு போகலாம்!" என்முன் கந்தர்வ குமாரன்.

உடனே அவன் பக்ஷி உருவ மாக மாறி அவிநாசனை முதுகில் ஏற்றிக்கொண்டு விண் ணில் எழும்பி மேகமண்டலங் களை யெல்லாம் தாண்டிப் பறக்கலானன். ஸந்தியாதேவி யின் இருப்பிடத்துக்குக் வந்து சேர்ந்தார்கள். அவி நாசனை அங்கே பத்திரமாக இருக்கும்படி செய்துவிட்டு, கந்தர்வன் மட்டும் தென் வட கோடியிலுள்ள ஜடாமுனிக் கோட்டையை அடைந்தான்.

ஜடாமுனியை வெல்ல வேண்டுமானல் முதலில் அதன் குதிரையைப் பிடித்துவிட வேண்டும். அடுத்தபடி அந்தக் குதிரையின் சேணத்தை மாற்றிவிட வேண்டும். பிறகு தான் ஜடாமுனியைத் தோற் கடிக்க முடியும். இது கந்தர்வ குமாரனுக்குத் தெரியும்.

ஆனல் ஜடாமுனியின் வெள் ளைப் புரவி ரொம்பப் பொல் லாதது. மகா புத்திசாலி! அதைக் கைப்பற்றுவது எப் படி? நடுநிசி நேரம். கந்தர்வன் மண் தரையில் கரணங்கள் போட்டு, கொசு உருவத்தில் கோட்டைக்குள் நுழைந்தான். குதிரை நிற்குமிடம் வந்ததும் மறுபடியும் கரணம் போட்டு மனித வடிவை அடைந்தான். குதிரை தன் பக்கத்தில் வேற்று

மனிதன் வந்து நிற்பதைக் கண்டதும், 'ஹி ஹி ஹி ஹி ஹி' என்று பெரிதாகக் கனைத்தது.

ஜடாமுனி அப்போது நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தது. குதிரை கனைக்கும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து வந்தது. அப்பாடா! என்ன பூதாகாரமான உடல்! எவ்வளவு பெரிய தலை, கண்கள், வாய்! கைகளும் கால்களும் எத்தனை பெரியவை! கந்தர்வன் பிரமை தட்டிப்போய் மறுபடியும் கொசு உருவத்தில் மறைந்துகொண்டான். ஜடாமுனி குதிரையை வந்து பார்த்தது. பிறகு சுற்றுமுற்றும் பார்த்தது. காக்கை, குருவியைக்கூடக் காணவில்லை.

"வீணுக்காகக் கத்தி என் நித்திரையைக் கலைத்தாயா, புத்தி கெட்ட குதிரையே!" என்று கைச் சவுக்கை எடுத்து, பளார், பளார் என்று வீரிட இழுத்தது. குதிரை கண்ணில் ஜலம் கசிய நின்றது. ஜடாமுனி சென்றதும் கொசு உருவத்திலிருந்த கந்தர்வன் சுயரூபத்தை எடுத்துக்கொண்டு குதிரையைத் தட்டிக் கொடுத்தான். குதிரை இந்தத் தடவை, 'நான் எதற்காகக் கனைப்பேனும்!' என்று பேசாமல் அடங்கி நின்றுவிட்டது. கந்தர்வன் சேணத்துடன் குதிரையை வெளியே கொண்டுவந்து ஸந்தியாதேவியின் மாளிகையை நோக்கித் தட்டிவிட்டான். அவிநாசன் அப்படிப்பட்ட அழகான குதிரையை எங்குமே கண்டதில்லை. கந்தர்வன் அந்தச் சேணத்தை அவனிடம் கொடுத்து. "இந்தச் சேணம் இருக்கும் வரையில் நீதான் இந்தக் குதிரையின் எஜமானன்" என்று கூறினான்.

பல பலவென்று பொழுது விடிந்தது. ஜடாமுனி கோட்டை வாயிலில் நின்றது. கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்திருந்தன. அற்புத வெள்ளைப் புரவி காணமல் போய்விட்டதே என்று அதற்கு மகா கோபம்.

இந்தச் சமயத்தில் எதிரே ஒரு கிழவன் ஒரு பிரம்மாண்டமான மரத்தை வெட்டிச் சாய்த்துக்கொண்டிருந்தான். ஜடாமுனி கோர கர்ஜனையுடன், "அடே, யாரடா நீ? ஏன் என் கோட்டை வாசல் மரத்தை வெட்டுகிறாய்?" என்று கேட்டது. கிழவன் சிறிதும் பயப்படாமல், "ஏன் என்று கேட்கிறாய்? ஹா-ஹா-ஹா-! சரயு பக்ஷி உருவத்தில் திரியும் அந்தக் கந்தர்வனைப் போட்டு அடைக்க ஒரு பெரிய மரக்குழாய் வேண்டும்! இந்த மரத்தைத்தவிர உலகத்தில் வேறு பெரிய மரம் எங்கிருக்கிறது? நீதான் சொல்லேன்" என்றான்.

ஜடாமுனிக்கு வியப்பாய் இருந்தது. அதனுடைய குதிரையைத் திருடி ஓட்டிச் சென்றவன் அவனாகத்தான் இருக்கவேண்டும்! தன்னைப்போல இதோ அவனுக்கு இன்னொர் எதிரி இருப்பதை அறிந்ததும் அதன் சந்தோஷம் எல்லை கடந்தது.

"ஆ! அப்படியா சேதி! உன்னால் அந்தக் கந்தர்வனைப்

பிடிக்க முடியுமா?" என்று கேட்டது ஜடாமுனி.

"நீ வேண்டுமானால் பாரேன்!" என்றான் கிழவன்.

"இரு இரு; நானே உனக்கு உதவி செய்கிறேன்" என்று ஜடாமுனி மரத்தை நன்றாகக் குடைந்து கொடுத்தது. இருவரும் அதை நன்றாக அமைத்தார்கள். என்ன செய்தாலும் திறக்க முடியாத இரும்பு மூடி ஒன்றைத் தயாரித்தார்கள்.

"எங்கே! இதற்குள் யாராவது உட்கார்ந்து பார்த்தால் தானே, திறக்குமா திறக்காமல் கெட்டியாக இருக்குமா என்று தெரியும்?" என்றான் கிழவன்.

"இதோ, நானே உட்காருகிறேன். திறக்காமல் இருக்கிறதா பாரேன்" என்றது ஜடாமுனி.

ஜடமுானி உள்ளே நுழைந்ததும் கிழவன் அதன் இரும்பு மூடியை சர்வ ஜாக்கிரதையாக மூடிப் பூட்டினான். ஜடாமுனி அந்தப் பெரிய குழாயைப் அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப் பார்த்து உருட்டியது. அதன் மூடியைத் திறக்கவே முடியவில்லை. நல்ல வலுவுள்ளதாய் இருந்தது.

"அடேயப்பா, ரொம்பப் பந்தோபஸ்தாய் இருக்கிறது! கந்தர்வன் தொலைவது அடியோடு நிச்சயம். மூச்சுவிடவே முடியவில்லையே" என்றது ஜடாமுனி திணறிக்கொண்டு.

ஆனால் அந்தக் கிழவன் இடிபிடியென்று சிரித்தானே தவிர மூடியைத் திறக்கவில்லை.

"அடே ஜடாமுனி! வசமாக மாட்டிக்கொண்டாயா, பயலே! கந்தர்வனா தொலைவான்? இல்லை, இதோ இருக்கிறேன், பார்! ஆனால் நிச்சயமாகத் தொலைந்தது யார் தெரியுமா? நீதான்" என்றான் கிழவன் உருவத்திலிருந்த கந்தர்வன்.

அதற்குப் பிறகு மரக்குழாயினுள் பேச்சு மூச்சே ஒடுங்கிவிட்டது. மூச்சு விட முடியாமல் யாரால்தான் உயிரோடு இருக்க முடியும்!

ஸந்தியாதேவியின் மாளிகையிலிருந்து அவிநாசன் வெற்றி வீரனாக புறப்பட்டான். கந்தர்வனும் ஸந்தியாதேவியும் அவனை ஆசீர்வதித்து, வைர முடி ஒன்றை அணிவித்து ஜடாமுனியை அடைத்த மரக்குழாயைக் குதிரையின் வாலில் கட்டி அனுப்பினார்கள்.



தாமரங் கோட்டைக்குத்தான் முதலில் அவிநாசன் வந்து சேர்ந்தான். ராஜகுமாரி அவிநாசனையும் அவன் அணிந்திருந்த வைர முடியையும் பார்த்து அதிசயித்தாள்.

அவிநாசனை அரசன் மரியாதையுடன் எதிர்கொண்டழைத்தான். மேளதாளங்கள் முழங்கின. பேரிகைகள் ஒலித்தன. "இந்த இளவயதில் நினைப்பதற்கும் அரிய வீரச் செயல் புரிந்த அவிநாசனுக்கு என் குமாரி மாலையிட ஆசைப்படுகிறாள்" என்று ராஜசபையில் அறிவித்தான் அரசன்.

கல்யாணத்தின்போது ராஜகுமாரியின் தலையில் அந்த வைர மணிக் கிரீடம் பளபளத்தது. கரிய கறுப்பனை அதற்குப் பின் காணவேயில்லை!

311775

தயவு செய்து கீழ்க்கண்ட அதிசயக் கணக்கைக் கண்ணன் இதழில் போடவும். வந்தனம்.

```
 123456789
 987654321
 123456789
 987654321
         2
----------
2222222222
----------
```

சென்னை-600 008

N. [illegible] (N. 12) 10 வயது, குகை, சேலம்.

ஃ ஃ ஃ

'கண்ணன் வாழ்க'

கண்ணனை வாங்கிடுவோம் - அதைக்
கவனித்துப் படித்திடுவோம்;
கண்ணனில் உள்ள கதை - ஒவ்வொன்றும்
கனியைப் போல் இனித்திடுதே.
கதையுடன் வசனங்களும் - கருத்தை
மயக்கிடும் படங்களுடன்;
மாதமும் ஒரு முறையே - வந்து
மகிழ்வித்திடுமே

பி. எஸ். அப்துல் (13 வயது) குன்னத்தூர்.

ஃ ஃ ஃ

சகுந்தலை

மாயாபுரி என்னும் ஒரு ஊரில் சகுந்தலை என்னும் ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் ஒருநாள் பல்லக்கில் ஏறிக்கொண்டு காளி அம்மன் கோவிலுக்குச் சென்றாள். கோவிலுக்குச் செல்லும்போது ஒரு காட்டைத் தாண்டித்தான் செல்லவேண்டும். அதேபோல் சகுந்தலை காட்டின் வழியே சென்றுகொண்டிருக்கும்போது கொடூரசிம்மன் என்னும் ஒருவன் பல்லக்குத் தூக்கும் ஆட்களுடன் சண்டை செய்து கொன்றுவிட்டுச் சகுந்தலையைத் தூக்கிச் சென்றுவிட்டான். அப்போது வீரசிம்மன் என்னும் இளவரசன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வந்து கொடூரசிம்மனேடு சண்டைசெய்து கொடூரசிம்மனைக் கொன்றுவிட்டுச் சகுந்தலையை மீட்டுச் சென்றுவிட்டான்.

ஜ. பாரதி (B. 7) 9 வயது (ரெயில் பரிசுப் போட்டிக்கு வந்த சின்னஞ்சிறு கதை.)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MAD[illegible], 4.

Reg. No. M

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இது மற்றச் சங்கங்களைப்போல் அல்ல; புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும்.

இதில் உடனே சேரவேண்டுமென்று உங்களுக்கு ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூப்ன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். கூபன்களை அந்த அந்த மாதமே பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். ஒரு விஷயம்: குச் சந்தாத் தொகை எ கிடையாது; கூபன்கள்தான் முக்கியம். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு குழந்தையும் தனித் தனிக் கூபன் அனுப்பவேண்டியதில்லை. இந்த இதழில் 3-ஆவது அட்டையில் பேனாப் பரிசுப் போட்டி இருக்கிறது. இதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம் மற்றவர்கள் இதில் கலந் கொள்ள முடியாது.

பேனாப் பரிசு!

போன தடவை ரெயில் பரிசு கொடுத்தேன். இந்தத் தடவை என்ன கொடுக்கிறதென்று யோசித்துப் பார்த்தேன். கதை எழுதுகிற குழந்தை மேலும் மேலும் எழுதி எழுதிப் பல பரிசுகள் வாங்கட்டுமே. பெரியவனான பிறகுகூடப் பெரியவர்கள் பத்திரிகைகளுக்குக் கதையோ நாவலோ எழுதிப் பரிசு பெறலாம். அப்படி எழுத ஒரு பேனாவைக் கொடுத்தால், என்ன என்று தோன்றியது. பரிசாக வந்த பேனா, பரிசை வாங்கித் தருவதற்கு உதவுமே. ஆகவே அடுத்த கதைக்கு நல்ல பேனா ஒன்றைப் பரிசாக அளிக்கத் தீர்மானித்து விட்டேன்.

என்ன கதை எழுத வேண்டும் தெரியுமா? இதோ ஒரு படம் இருக்கிறதே, பாருங்கள். இதை வைத்துக் கதை எழுதவேண்டும். உங்களுக்கு எப்படியெல்லாம் தோன்றுகிறதோ அப்படி எழுதுங்கள்.

● நிபந்தனைகள்.

1. சொந்தக் கதையாக நக்கவேண்டும்.

2. படத்தில் கண்டவர்களை வைத்துக் கதை எழுதவேண்டும்.

3. எழுதுகிறவர் கண்ணன் கழக அங்கத்தினராக இருக்க வேண்டும்.

4. 7-முதல் 15-வயசுக்குள் இருக்க வேண்டும்.

5. உங்கள் அப்பாவோ அம்மாவோ வாத்தியாரோ எழுதுகிறவர் வயசுக்கு அத்தாட்சி கொடுக்க வேண்டும்.

. கதை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 15—4—'50.